for young friends of fmpb

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

இளைஞர் மாத இதழ்

# தரிசனக் களத்தில் வீரியம் காண்போம்!



களத்தில் 2026 வீரியம்

Vol 38-Issue 5 - May - 2026

Private circulation only

# கிறிஸ்து மோசேயிலும் மேன்மையானவர்



யூதர்களுக்கு மோசே ஒரு மாபெரும் தலைவர். தேவனிடமிருந்து நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக்கொடுத்த இவரை, எபிரெயர் புத்தகத்தின் ஆசிரியர், மோசே எவ்வளவு பெரியவராக இருந்தாலும், இயேசு கிறிஸ்து அவரைவிட மேன்மையானவர் என்பதை மிகத் தெளிவாக விளக்குகிறார்.

**அழைப்பின் அடிப்படையில் மேன்மை (எபி. 3:1)**

- ✦ **பரம அழைப்பு: நாம் அனைவரும் பரம அழைப்பிற்குப் பங்குள்ளவர்கள்.**
- ✦ **அப்போஸ்தலரும், பிரதான ஆசாரியரும்: மோசே ஒரு தீர்க்கதரிசி. ஆனால் இயேசு நமது விசுவாசத்தின் தந்தை (அப்போஸ்தலர்) மற்றும் நமக்காகப் பரிந்து பேசும் பிரதான ஆசாரியர்.**

**சிந்தனை செய்யுங்கள்:** மோசையைப் பார்ப்பதைவிட, இயேசுவை உற்றுப்பாருங்கள் என்று வேதம் அழைக்கிறது.

**படைப்பின் அடிப்படையில் மேன்மை (எபி. 3:3, 4):**

- ✦ **வீடும், வீட்டைக் கட்டினவரும்: ஒரு வீடு எவ்வளவு அழகாக இருந்தாலும், அதைக் கட்டினவனுக்குதான் அதிக கனம் உண்டு.**
- ✦ **சிருஷ்டிகர்: ஒரு வீட்டின் (இஸ்ரவேல் ஜனங்களில்) ஒரு பகுதியாக இருந்தார். ஆனால் இயேசு அந்த வீடு அனைத்தையும் படைத்தவர்.**
- ✦ **அதிகாரம்: மோசே படைக்கப்பட்டவர். ஆனால் இயேசு படைத்தவர்.**

**அந்தஸ்தின் அடிப்படையில் மேன்மை (எபி. 3:5, 6):**

- ✦ **வேலைக்காரனும், குமாரனும்: மோசே தேவனுடைய வீட்டில் ஒரு "உண்மையுள்ள ஊழியக்காரனாக" (Servant) இருந்தார். அவர் வரப்போகிற காரியங்களுக்குச் சாட்சியாக இருந்தார்.**
- ✦ **கிறிஸ்து: தேவனுடைய வீட்டிற்கு அதிகாரமுள்ள குமாரனாக (Son) இருக்கிறார்.**
- ✦ **உரிமை: ஒரு வேலைக்காரனைவிட, வீட்டிற்குச் சொந்தக்காரனான குமாரனுக்கே அதிகாரம் அதிகம்.**

**கீழ்ப்படிதலின் அடிப்படையில் மேன்மை:**

- ✦ **மோசே சில இடங்களில் விசுவாசக் குறைவு காட்டினார் (எண். 20:12). ஆனால் கிறிஸ்து சிலுவை மரணம் வரை பிதாவின் சித்தத்திற்குப் பூரணமாய் விசுவாசமுள்ளவராய் இருந்தார்.**

**துதிக்க:**

- சகலத்தையும் படைத்த சிருஷ்டிகராகிய உம்மை நாங்கள் துதிக்கிறோம். மனிதர்களை விட மேலானவரே உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம்!
- பிதாவின் வீட்டில் உண்மையுள்ள குமாரனாக அதிகாரம் கொண்டிருப்பவரே உம்மைத் துதிக்கிறோம். உம்முடைய சொந்த வீடாக மாற்றி, எங்களை ஆளுகைச் செய்கிற உமது மேன்மையை நாங்கள் போற்றுகிறோம்!

**விளக்கக் கதை:**

ஒரு பயணி அடர்ந்த காட்டைக் கடந்து ஒரு அழகான நகரத்திற்குச் செல்ல விரும்பினான். அவனிடம் அந்த இடத்தைச் சார்ந்த ஒரு பழைய வரைபடம் (Map) இருந்தது. இந்த வரைபடம் என்னை அற்புதமாக வழிநடத்துகிறது எனச் சொல்லி புகழ்ந்துக்கொண்டே சென்று கொண்டிருந்தான். திடீரென்று அந்தப் பாதையில் ஒரு பெரிய நிலச்சரிவு ஏற்பட்டது. இப்போது வரைபடத்திலுள்ள பாதை மறைந்துவிட்டது. அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அப்போது அந்த நகரத்தின் இளவரசர் குதிரையில் அங்கு வந்தார். அவர் பயணியைப் பார்த்து இந்த வரைபடம் பழையது. இது வழியைக் காட்டும் ஒரு காகிதம் மட்டுமே. ஆனால் நானோ இந்த தேசத்திற்கே சொந்தக்காரன். ஆகையால் என் பின்னால் வா! நான் உன்னை நேரடியாக அழைத்துச் செல்கிறேன் என்றார்.

**கதையின் நீதி:**

இங்கே வரைபடம் என்பது மோசே கொடுத்த நியாயப்பிரமாணம். இது வழியைக் காட்டும். ஆனால் நம்மைப் பரலோகம் கொண்டு சேர்க்கும் வல்லமை அதற்கு இல்லை. இளவரசர் என்பவர் இயேசு கிறிஸ்து. அவர் வழியாய் இருக்கிறார் (யோவான் 14:6). வரைபடம் (மோசே) ஒரு ஊழியக்காரனைப் போல் வழிகாட்டுகிறது. ஆனால் இளவரசரோ (இயேசு) அந்த தேசத்தின் அதிபதியாக நம்மை நேரில் வழிநடத்துகிறார். எனவே வரைபடத்தைவிட இளவரசரே (இயேசு கிறிஸ்துவே) மேன்மையானவர். ஆமென்!

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

## VISION

To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

## OBJECTIVE

A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth Wing


www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266


**தனிப்பிரதி ரூ. 25/-**
**ஆண்டு சந்தா ரூ. 250/-**

ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX


| | |
|---|---|
| இளம் வாலிபர்களின் அறிவியல் களம் - Set Square 60° | - 5 |
| எலினோர் யங் (Elinor Young) - வாழ்க்கை வரலாறு | - 6 |
| இத்தாலி | - 10 |
| எண்ணச் சுழற்சி கோளாறு | - 12 |
| Bhajan Clubbing | - 14 |
| உங்க சாமி எங்க பாஷையில் பேசுவாரா? | - 15 |
| தேவ ஞானத்தில் நடந்திடுங்கள்! | - 20 |
| கனம் பெற்ற கமாலியேல் | - 22 |


# தரிசனக் களத்தில் வீரியம் காண்போம்!

பேர் சொல்லி அழைக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில், வாலிபர்கள் அனைவருக்கும் எங்கள் அன்பின் வாழ்த்துக்கள்!

“உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்” (யோவேல் 2:28) என்பது கர்த்தர் யோவேலின் மூலம் கொடுத்த தீர்க்கதரிசனம். இந்த தீர்க்கதரிசனம் “தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே நடந்தேறுகிறது” என்பதாக பேதுரு அப். 2:16இல் குறிப்பிடுகிறார். அதன் பின்பு அவர்கள் அனைவரும் தரிசனத்தோடு சுவிசேஷப் பணியை ஆரம்பித்தனர். இதன் விளைவாக “இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்” (அப். 2:47).


தரிசனம் அல்லது தூரநோக்கு என்பது எதிர்காலத்திற்குரிய இலக்கைக் கொண்டது. ஒரு நிறுவனம் எதிர்காலத்தில் எதை அடைய விரும்புகிறது அல்லது எப்படி உயர்ந்த நிலைக்கு மாற விரும்புகிறது என்பதைக் காட்டும் முன்னோக்கிய ஊக்கம் கொடுக்கும் அறிக்கையாகும். இது வெற்றியின் ஒரு தெளிவான காட்சி. இந்த தரிசனத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் தனக்குள்ளே மட்டும் இதை வைத்துக்கொள்ளாமல் தன்னோடுள்ள மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டும். அப்போது அது வளர்ச்சியையும், வெற்றியையும் தருகிறது. VBS Friends Fellowshipஇன் நண்பர்கள் 1959ஆம் ஆண்டு கோவில்பட்டியில் ஒரு வீட்டின் அறையில் சுமார் 25 பேர் ஜெபிக்க கூடினர். ஜெபிக்க கூடி வந்தவர்கள் உள்ளத்தில் கர்த்தர் விசேஷித்த ஆவியை வைத்ததினாலே, திட்டவட்டமான செயலுக்குள் இறங்க கர்த்தரிடமிருந்து அவர்கள் தெளிவான தரிசனம் பெற்றனர். இந்த தரிசனத்தினால் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு என்றதான இந்த மிஷனெரி இயக்கம் உருவானது. 1967இல் இந்த இயக்கம் முதல் மிஷனெரியை அனுப்பியது. தொடர்ந்து தரிசனத்தோடு ஜெபித்து, செயல்பட்டதினால் இன்றைக்கு மாபெரும் இயக்கமாக வளர்ந்துள்ளது.

“கிறிஸ்தவ வெற்றி வாழ்க்கைக்குத் தரிசனமும், தாகமும் இன்றியமையாத இரண்டு” என்பது லியோனார்டு ரேவன்ஹில் அவர்களின் பொன்மொழி. இதற்கு நெகேமியாவை முன் மாதிரியாக எடுத்துக் கொள்ளலாம். இவர் ஜெபிக்கும் தலைவர்களில் தலைசிறந்தவர்களில் ஒருவர். கர்த்தர் மேலிருந்த தன் முழு நம்பிக்கையினால் செய்ய முடியாது என்று தோன்றின கடினமான வேலைகளையும் கூட செய்து நிறைவேற்றினார். அவருடைய ஜெபம், தியாகம், கடின உழைப்பு, விடாப்பிடியான உறுதி அனைத்தும் கர்த்தர் அலங்கத்தை கட்டக் கொடுத்த தரிசனத்தை நிறைவேற்றுவதற்கு உதவியது.

பிரியமான வாலிபர்களே! உங்கள் எதிர்காலத்தைக் குறித்த தரிசனம் உங்களுக்கு இருக்கிறதா? அப்படி எந்த தரிசனமும் எனக்கு இல்லை என்ற நிலையில் இருப்பீர்களானால், உங்கள் எதிர்காலத்தை கர்த்தரிடத்தில் அர்ப்பணியுங்கள். சுவிசேஷத்தை இந்தியர்கள் அனைவருக்கும் அறிவிக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு உண்டு என்பதை மறந்து போகவேண்டாம். நீங்கள் தரிசனம் பெற்றால் களத்தில் வீரியம் காண கர்த்தர் உதவி செய்வார்.

இம்மாதம் 21 – 24 ஆகிய நாட்களில் சேலம், டேனிஷ்பேட்டையில் நடைபெறும் மாநில முகாமில் வாலிபர்களுக்கு தனி கூடுகை உண்டு. இம்முகாமிற்கு நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் நண்பர்கள், சபை மக்கள், உறவினர்களோடு வந்து கலந்து கொள்ளுங்கள் என்று அன்போடு அழைக்கிறோம். இம்முகாமிற்கு உங்களது வரவை ஆவலோடு எதிர்பார்க்கிறோம். தேவ கிருபை உங்களோடிருப்பதாக. ஆமென்!

கிறிஸ்துவின் உன்னதப் பணியில்
*ஜெ. டேனியல் அருள்மணி*



# கப்பல் நங்கூரம்
# செபுலோன்

REV. DANIEL GNANAPRAGASAM



நங்கூரம் - காற்றின் வேகம் மற்றும் நீரோட்டத்தால் கப்பல் இழுத்துச் செல்லப்படாமல் ஒரே இடத்தில் நிற்க பயன்படுத்தப்படும் கருவியாகும். அது உறுதியான மாறுபாடில்லாத மனநிலைக்கு அடையாளமாகக் கருதப்படுகிறது. இந்த இதழில் கப்பல் நங்கூரம் போன்ற போராட்டத்தை எதிர்கொள்ளும் தைரியத்தையும், இலக்கின்மீது அசைக்கமுடியாத அர்ப்பணிப்பையும் கொண்டு செயல்பட்ட கோத்திரப் பிதாக்களில் ஒருவரான செபுலோனைக் குறித்து சிந்திக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

செபுலோன், தகப்பன் யாக்கோபுவின் மனைவி லேயாளுக்குப் பிறந்த ஆறாவது மகனும், யாக்கோபின் எல்லா மகன்களிலும் பத்தாவது மகனும் ஆவார். சகோதரிகளான லேயாளுக்கும், ராகேலுக்கும் இடையே கணவரின் கவனத்தைப் பெறுவதற்காக நடந்த போட்டியின்போது செபுலோனின் பிறப்பு நிகழ்ந்தது. செபுலோனின் பிறப்பின்போது லேயாள் "தேவன் எனக்கு நல்ல ஈவைத் தந்தார், என் புருஷனுக்கு நான் ஆறு குமாரரைப் பெற்றபடியால் இப்பொழுது அவர் என்னுடன் வாசம் பண்ணுவார்" என்று சொல்லி செபுலோன் என்று பேரிட்டாள். செபுலோன் என்ற பெயருக்கு "வாசம் பண்ணுதல்" என்று அர்த்தமாம். யூதாவிற்கு அடுத்தபடியாக யாக்கோபுவின் ஆசீர்வாதக் கூறுதலில் செபுலோன் முக்கியத்துவம் பெறுகிறார். (யூதாவிற்கு அடுத்துள்ள ஐந்து சகோதரர்களை முந்திக் கொள்கிறார்).

### *செபுலோனின் சுபாவமும், மனநிலையும்:*

செபுலோனின் வாழ்க்கையைப் பற்றி வேதாகமம் அதிக விவரங்களைத் தரவில்லை. ஆனால் பின்னாளில் அவனுடைய சந்ததியாரின் செயல்பாடுகளின் அடிப்படையில் செபுலோனின் சுபாவத்தை நாம் அடையாளம் காணமுடியும். செபுலோன் கோத்திரம், வெறும் காலாற்படை வீரர்களை மட்டும் கொண்டிராமல், படைகளை ஒழுங்கமைப்பதில் நிபுணத்துவம் பெற்ற படித்த அதிகாரிகள் மற்றும் இராணுவத் தளபதிகளையும் கொண்டிருந்தனர். கானானியத் தளபதி சிசெராவிற்கு எதிரான போரில், தெபோராளுடன் செபிலோனிலிருந்து எழுதுகோலைப் பிடிக்கிறவர்களும் இறங்கி வந்தார்கள் (நியா. 5:14). தங்கள் எல்லைக்குள் (கீசோன் பள்ளத்தாக்கு) யுத்தத்திற்கு வந்த எதிராளிகளைப் போர்க்களத்து முனையில் தங்கள் உயிரை எண்ணாமல் மரணத்திற்குத் துணிந்து நிற்கும் மன உறுதியைக் கொண்டிருந்தனர் (நியா. 5:18).

பொதுவாக செபுலோன் பிரிவினைகளை விரும்பாத இருதயத்தைப் (undivided heart) பிரதிபலிக்கிறார். அவர்கள் தங்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தப் பூமியில் வாசம்பண்ண விரும்பியவர்கள். தங்களுக்கு எதிராக செயல்படுபவர்களை எதிர்த்து யுத்தம் செய்ய யுத்த ஆயுதங்களைச் செய்வதற்கும், தங்கள் அணியைக் காத்து நிற்கிறதற்கும் பழகினவர்கள். வஞ்சனை செய்யாமல் யுத்தத்திற்குப் போகத்தக்கவர்கள் (1 நாளா. 12:33). அவர்கள் இருதய விருப்பமும், செயல்பாடும் அவர்களை நிலையானவர்களாகவும், வெற்றிகரமானவர்களாகவும் அடையாளப்படுத்துகிறது. இலக்கின் மீது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு, வஞ்சக எண்ணங்களுக்கு இடங்கொடாமல் போராட்டத்தை எதிர்கொள்ளும் நங்கூரமிட்ட மனநிலையை விவரிக்கிறது.

### *தகப்பனின் ஆசீர்வாதம்:*


"செபுலோன் கடல்துறை அருகே குடியிருப்பான்; அவன் கப்பல் துறைமுகமாய் இருப்பான்; அவன் எல்லை சீதோன்வரைக்கும் இருக்கும்" (ஆதி. 49:13). செபுலோனின் சந்ததியினரைப் பற்றிய தீர்க்கதரிசனம் அவர்களின் கடல்வழி வணிகத்தைப் பற்றி பேசுகிறது. அவர்களின் கோத்திரப் பங்கீடு மத்தியதரைக் கடலுக்கும், கலிலேயக் கடலுக்கும் இடையில் இருக்கிறது. இப்பகுதி கடற்பயணம் மற்றும் வர்த்தகத்திற்காக பெயர்ப்பெற்றிருந்தது. வியா மாரிஸ் (Way of the sea) என்ற வணிகப்பாதை, வடகிழக்கிலுள்ள தமஸ்குவிலிருந்து, தென்மேற்கிலுள்ள எகிப்து வரை சென்றது. படகு அல்லது கப்பல் அவர்களின் சின்னமாக இருக்கிறது. யாக்கோபின் தரிசனத்தில் செபுலோனைப் பற்றிய இரண்டாவது உண்மை, அவனுடைய எல்லை சீதோன் வரைக்கும் இருக்கும் என்பதாகும். கோத்திரப் பங்கீட்டில் ஆசேர் கோத்திரத்திலிருந்த சீதோன் பிரிக்கப்பட்டு செபுலோன் வசமானது (யோசுவா 19:27, 28). அங்கே வடக்குக் கடற்கரைக்கு இணையாக உள்ள பள்ளத்தாக்குப் பகுதி "செபுலோனின் பள்ளத்தாக்கு" என்று அழைக்கப்படுகிறது.

### *தலைவனின் தரிசனம்:*

தலைவன் மோசேயின் தரிசனத்தில் செபுலோனைக்குறித்து: செபுலோனே, நீ வெளியே புறப்பட்டுப்போகையிலும், இசக்காரே, நீ உன் கூடாரங்களில் தங்குகையிலும் சந்தோஷமாயிரு. ஜனங்களை அவர்கள் மலையின்மேல் வரவழைத்து, அங்கே நீதியின் பலிகளை இடுவார்கள்; கடல்களிலுள்ள சம்பூரணத்தையும் மணலுக்குள்ளே மறைந்திருக்கும் பொருள்களையும் அநுபவிப்பார்கள் என்றான்" (உபா. 33:18, 19). செபுலோன், கடல்வழி வர்த்தகம் மற்றும் வணிகத்திற்காக வெளியே சென்று தொழில் செய்பவர்கள். இசக்கார் கூடாரங்களிலிருந்து விவசாயம் மற்றும் தோராவைக் கற்பிப்பதில் தழைத்தோங்குகிறவர்கள். இருவருக்குமிடையே பரஸ்பர நன்மை பயக்கும் ஓர் உறவு இருந்தது.

-இதன் தொடர்ச்சி 18ஆம் பக்கம்

# SET SQUARE $60^{0}$





MRS. JOYLINE JEROME

*My dear teen Boys and Girls, happy May month greetings to you and your family.*

May month என்றாலே Vocation mode தான், ரொம்ப friendsயோட ஊர் சுத்தாம usefulஆ time spend பண்ணினா நல்லாயிருக்கும். அத நீங்கள் decide பண்ணிக்கோங்க. அப்புறம் இந்த month FMPB மூலமா Salem, Danishpetல 21 - 24 வரை நடக்க போற Annual Campக்கு நீங்க கண்டிப்பா வாங்க, அப்படியே உங்க friendsயையும் கூடவே கூட்டிட்டு வாங்க. நாம Danishpetல சந்திக்கலாம். இந்த Teen pageயோட plan, நீங்க அடிக்கடி use பண்ணுற Geometry boxல இருக்கிற things தான். Last 4 monthsஆ Compass, Divider, Protractor, Set Square 45°னு எல்லாத்தையும் பத்தி பார்த்தோம். அந்தபடி இந்த month நாம பார்க்கப்போறது Set Square 60°.

usualஆ anglesன்னு பார்த்தவுடனே நம்ம கை போறது Protractor கிட்டதான். அது Correctஆ இருந்தாலும், ஒருசில specific applicationக்கு set square use பண்ணுறது ரொம்ப sufficient ஆன method. Basically set square 60°ல three angles இருக்கும். 30°, 60°, 90°. இத வச்சி Equilateral triangles easyஆ வரைய முடியும். (All angles are @ 60°). 3D shapes ரொம்ப sufficientஆ வரையறதுக்கு set square usefulஆ இருக்கும். Additionalஆ parallel & perpendicular linesஅ any projectionல easyஆ வரைய முடியும். ஒரு set square 45° & 60°அ வச்சி complex angles ஆன 15°, 75°, 105°, 120° etc. easyஆ construct பண்ண முடியும். 3D drawingல வர்ற angles for triangleன்னு எல்லாத்தையும் efficientஆ construct பண்ண முடியும். Modern drafting software எல்லாம் வந்தாலும், manual draftingல ஒரு முக்கியமான tool set square 60°. Quickஆ ஒரு building layout அல்லது furniture design வரையறதுக்கு இது அவசியம். Parallel Wall, Decorative structure, Elevations, Staircase designனு இதோட application நிறைய இருக்கு.

Okay, இப்ப Bible application time, set square 60° வச்சி வரையிற equilateral triangle (All angles are @ 60°), இது நமக்கு மூன்று விஷயங்களை நியாபகப்படுத்துகிறது. Equilateral triangleல 3-sides & 3 corners இருக்கும். எந்த cornerல, angleல measure பண்ணினாலும் 60° தான் இருக்கும். இப்படி equilateral triangleஅ baseஆ வச்சி build பண்ணுற structuralல, ஏதாவது ஒரு corner 60° பதில் 59° or 61° இருந்திச்சுன்னா, அந்த structure weak ஆயிரும். நம்முடைய lifeலயும் மூன்ற முக்கிய elements இருக்கு. அதுதான் Mind (ஆவி), Body (சரீரம்), Soul (ஆத்துமா). இவை மூன்றும் equalஆ balance ஆகலைனா, நம்ம Christian life style totalஆ collapse தான்.

பொதுவா mind (Spirit) எப்பவுமே ஒரளவுக்கு fitஆ தான் இருக்கும். ஏன்னா, நம்ம school கொடுக்கிற training அப்படி. ஆனா அதவச்சி Bible verses மனப்பாடம் செய்றோமா? இப்படி memorize பண்ணுறதால நிறைய advantages இருக்கு. நம்ம schoolல எவ்வளவு விஷயங்களை memorize பண்ணுறோம். ஆனா lifeஅ மாத்துற கடவுளுடைய வார்த்தைக்கு நாம எவ்வளவு importance தர்றோம் அப்படின்னு உங்களையே கேட்டுப்பாருங்க. இந்த Christ center life styleளோட instructionஅ Paul, கொலோசெயர் churchக்கு சொல்லுறத கேளுங்க! "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக" (கொலோ. 3:16a).

அடுத்தது Body, உங்களால எந்த preparationனும் இல்லாம 5km walk பண்ண முடியுமா? ஒரு 10km slow jogging பண்ணுவீங்களா? ஒரு 10 pushups, 10 pull-ups, boys & girls இரண்டு பேருகிட்ட தான் கேட்கிறேன். நம்முடைய Bodyயை எந்தவொரு physical activityலயும் involve பண்ணலைனா அது நம்ம பண்ணுற பெரிய mistake. ஏன்னா நம்ம body தான் கர்த்தர் தங்கும் ஆலயம். நீங்க ஏதாவது ஒரு physical activity 30 minutes பண்ணுங்க. உங்களுடைய Christ center life style ரொம்ப healthyஆ இருக்கும். இத Christ centered life styleலோட instructionஆ Paul கொரிந்தியர் Churchக்கு சொல்லுறதைக் கேளுங்க! "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?" (1 கொரி. 6:19).

Lastஆ Soul, this is the part that aligned with God. அப்படி Godடோட alignedஆ இருக்கிறது தான் Prayer & Bible meditation. ஒரு நாளைக்கு 30 minutes கூட Bible read பண்ணி, Prayer பண்ண முடியலைனா, YOU ARE NOT ALIGNED WITH GOD. மணிக்கணக்கா music, games, chatன்னு time பத்தாம போகுது. ஆனா prayer பண்ணுறதுக்கும், Bible வாசிக்கிறதுக்கும் time இல்ல? கொஞ்சம் seriousஆ உங்க life styleஅ examine பண்ணுங்க. இத Christ centered life styleலோட instructionஆ சங்கீதகாரன் சொல்லுறத கேளுங்க! "துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (சங்கீதம் 1:1-2).

So, teen's உங்க Christian life styleஅ ஒரு தடவ examine பண்ணுங்க. Mind, Body, Soulஅ Christ centeredஆ balancedஆ வையுங்க. கர்த்தர்தாமே உங்களோடிருப்பாராக!

*Until then see you next month. Bye!!!*



# BAD LEGS
## எலினோர் யங்
### - வாழ்க்கை வரலாறு

MR. B. BENJAMIN

எலினோர் யங், நவம்பர் 5, 1946 அன்று அமெரிக்காவில் வாஷங்டன் மாகாணத்திலுள்ள ஸ்போகேன் நகரில் பிறந்தார். அவரது பெற்றோர் ஆல்ஃபிரட் ஏர்ல் மற்றும் ரொசெட்டா யங். எலினோரின் தகப்பனார் வாஷங்டன் மாகாணத்தில் ஒரு "ரேஞ்ச்" மேனேஜராக இருந்தார்.

டிசம்பர் 1951இல் எலினோருக்கு 5 வயதாயிருக்கும்பொழுது போலியோ நோய் ஏற்பட்டது. அவர் வாஷங்டனில் உள்ள ஸ்போகேன் நகரிலுள்ள ஒரு மருத்துவமனையில் ஏழு மாதங்கள் சிகிச்சையிலிருந்தார். பின்னர் இரண்டு ஆண்டுகள் வெளிநோயாளர் சிகிச்சையில் கழித்தார். 9 முதல் 14 வயதுக்குட்பட்ட காலத்தில் அவர் பலமுறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். நாளாக நாளாக நோயின் தாக்கம் அதிகரித்தது. ஆனால் பூரண சுகத்தை அவரால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

எலினோர் தனது 9வது வயதிலிருந்தே கர்த்தரின் சித்தத்தைக் கண்டறிந்து பின்பற்றுவதற்குத் தன்னை அர்ப்பணித்திருந்தாள். அவருக்கு வெளிநாடுகளுக்கு சென்று மிஷனெரியாகப் பணியாற்ற வேண்டும் என்ற ஆர்வம் சிறுவயதிலிருந்தே இருந்தது. RBMU – Regions Beyond Missionary Union (இப்போது World Team என்று அழைக்கப்படுகிறது) என்ற அமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, தனது 27வது வயதில் எலினோர் இந்தோனேசியாவின் இரான் ஜெயாவில் (IRIAN JAYA, INDONESIA) உள்ள கோருபுன் (அல்லது கிம்யால்) (KORUPUN or KIMYAL) பழங்குடியினரிடையே தனது ஊழியத்தைத் தொடங்கினார்.

அவர் முதன் முதலில் அவர்களிடையே சென்றபோது, அவர்களில் ஒரு சிலருக்கு நற்செய்தியின் அடிப்படைகள் தெரிந்திருந்தது. ஆனால், அவர்களிடம் அவர்கள் மொழியில் வேதாகமம் இல்லை. ஆதலால் எலினோர் அவர்களுடைய மொழியையும், கலாச்சாரத்தையும் கற்றுக்கொண்டு, அவர்களுக்காக வேதாகமத்தை கிம்யால் மொழியில் மொழிபெயர்ப்பதே தனது முதல் பணியாகச் செயல்படுத்த முனைந்தார்.

இவர் இம்மக்களின் உள்ளத்தையும், மொழியையும் அறிந்து கொள்வதற்காக, அவர்களுடன் அதிக நேரத்தைச் செலவிட்டார். அங்குள்ள குழந்தைகளுக்கு வேதாகம கதைகளைக் கற்பிப்பதற்காக கிராமங்களுக்குச் சென்றார். ஒவ்வொரு கிராமமும் நீண்ட, செங்குத்தான மலைப் பாதைகளால் மற்ற கிராமங்களுடன் இணைக்கப்பட்டிருந்தது. இதனால் இப்படிப்பட்ட இடங்களுக்கு இவரது கால்களால் நடந்துசெல்ல முடியவில்லை. ஆகவே அந்த இடங்களுக்கு செல்வதற்கு அகலமான இரண்டு கம்புகளை முட்டுக்கொடுத்து, அதன் அடியில் ஒரு பலகையை இருக்கையாகப் பயன்படுத்தி, ஒரு தட்டையான வலைப்பையை நடுவில் இணைத்து அந்த கம்புகளுக்கு நடுவே அமர்ந்து கொள்வார். பாதை எந்த அளவு செங்குத்தாகவோ அல்லது கரடுமுரடாகவோ இருக்கிறதோ அதைப் பொறுத்து இரண்டு முதல் எட்டு பேர் அந்த கம்புகளைத் தங்கள் தோள்களில் சுமந்துக்கொண்டு செல்வார்கள்.

இவ்விதம் இரான் ஜெயாவில் 17 ஆண்டுகளில் கிம்யால் மக்களின் மொழியைச் சிறப்பாக கற்றுக்கொண்டார். எலினோர் வேதாகமத்தை கிம்யால் மொழியில் மொழிபெயர்ப்பதில் கடுமையாக உழைத்தார். மேலும் தனது வாழ்க்கை மூலம் அவர்களுக்குத் தேவனின் அன்பைக் காட்டினார்.

எலினோர் கோருபுனில் பல ஆண்டுகள் வாழ்ந்த பிறகு, கிம்யால் மக்கள் அவளுக்கு ஒரு புதிய பெயரைச் சூட்டுவதைக் கேட்டாள். யான் மீலி (பாதிக்கப்பட்ட கால்கள் – BAD LEGS) இதைப் பற்றி எலினோர் போதகர் சியூடிடம், "நீங்கள் ஏன் என்னை பாதிக்கப்பட்ட கால்கள் என்று அழைக்கிறீர்கள்? என் கால்கள் பாதிக்கப்பட்டுள்ளது என்பதுதான் எனக்குத் தெரியுமே, பின்னர் எனக்கு ஏன் இந்த பெயர்?" என்று கேட்டாள். அதற்கு போதகர், "**உங்களுடைய பாதிக்கப்பட்ட கால்கள் எங்களுக்கு முக்கியமானவை. பாதிக்கப்பட்ட கால்களைக் கொண்ட எங்கள் மக்கள் இந்த மலைகள் பள்ளத்தாக்கை விட்டு வெளியேற முடியாது. ஆனால், பாதிக்கப்பட்ட கால்களுடன் எங்களுக்கு தேவனுடைய வார்த்தையைக் கொடுப்பதற்காக இவ்வளவு தூரம் வந்துள்ளீர்கள். மேலும், நீங்கள் எங்களுடன் இங்கே தங்குவதற்கு தேவன் உதவியுள்ளார். இது எங்களுக்கு எவ்வளவு பெரிய பாக்கியம் என்றார்**".

கிம்யால் மக்களுக்குத் தனது ஊனமுற்ற கால்கள், அவர்கள் மீது தேவன் வைத்திருக்கும் அன்பின் சின்னம் என்பதை எலினோர் கண்டு கொண்டார். என்னவொரு அற்புதமான பெயர், என்னவொரு வியக்கத்தக்க தேவன். ஏறக்குறைய 18 ஆண்டுகளுக்குப் பிறகு, கோருபுனில் தொடர்ந்து ஊழியம் செய்வதற்கு முடியாமல் எலினோரின் உடல் மிகவும் பலவீனமடைந்தது. இதனால் இவர் கோருபுனை விட்டு வெளியேற வேண்டியிருந்தபோதிலும், தேவன் மற்ற மிஷனெரிகள் மற்றும் கிம்யால் மக்கள் மூலமாக செயல்பட்டு, புதிய ஏற்பாடு முழுவதையும் கிம்யால் மொழியில் மொழிபெயர்த்து முடித்தார். புதிய ஏற்பாடு நமது வேதாகமத்தைப் போல ஒரு புத்தமாக உருவாக்கப்பட்டது.

கிம்யால் மக்கள் புதிய ஏற்பாட்டை கொண்டாடி மகிழ்ந்தார்கள். "EIM AYOUNG DI GEID YUBU, SKY PATHER'S HOLY WORD" அது "எய்ம் அயோங் டி கெய்ட் யூபு" அதாவது "வானத்தந்தையின் பரிசுத்த வார்த்தை" என்று அதற்குப் பெயரிட்டு ஆர்ப்பரித்தார்கள்.

பிரியமானவர்களே! எனக்கு பெலனில்லை, வரமில்லை, தாலந்தில்லை, ஞானமில்லை என்று ஒதுங்கிட நினைக்கின்றீர்களா? எலினோர் யங்கின் சாட்சி நமக்கு ஓர் மிகச்சிறந்த சாட்சி.

கர்த்தர் யாரை அழைக்கிறாரோ, அவர்களை அவர் பயன்படுத்துகிறார்.

**குறைகள் நிறைந்தவன் நான் அன்றோ**
**அதை தெரிந்தும் அழைத்தது ஏன் என்றேன்.**
**கருவில் இருந்துன்னைத் தெரிந்தவர் நான்**
**பின்னே வா என முன் சென்றார்.**



**WHOM THE LORD CALLS, HE WILL USE.**

# மிஷனெரி அழைப்பு என்பது என்ன?

***முதலாவதாக***

அது உன்னதத்திலிருந்து நமக்கு வரும் அழைப்பு. வேத வசனங்களை நாம் கருத்தாய் படிக்கும்போது நமக்குள் எழுகின்ற அழைப்பு.

***இரண்டாவதாக***

அழைப்பு நம்மைச் சுற்றிலும் இருந்து வருகிறது. நம்மைச் சுற்றிலும் கிட்டத்தட்ட 3000க்கும் மேற்பட்ட மக்களினங்கள் வசிக்கிறார்கள். நாட்டின் ஜனத்தொகையில் 96% பேர் கிறிஸ்தவரல்லாதவர்கள். குறைந்தது இன்னும் 200 மொழிகளில் வேதம் மொழிபெயர்க்கப்பட வேண்டிய நெருக்கடி நிலை. வட மாநிலங்களில் எத்தனையோ மாவட்டங்களில் ஒரு திருச்சபை கூட இல்லாத பரிதாப நிலை.

***மூன்றாவது***

அழைப்பு என்பது கீழே இருந்து வரும் ஈனக்குரல். லாசருவையும், ஆபிரகாமையும் பார்த்து செல்வந்தன் கொடுத்த அழைப்பைப் போன்றது. அவனை என்னிடம் அனுப்பும் அல்லது அழிந்து கொண்டிருக்கும் என் சகோதரரிடத்திலாகிலும் அனுப்பும். இது கீழிருந்து வரும் அழைப்புக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு. கீழிருந்து எண்ணில்லா அழைப்புகள் வந்து கொண்டே இருக்கின்றன என்பதை நாம் அறிவோமா? நம்முடைய கைக்கடிகாரம் நிமிடத்திற்கு 60 முறை ஒலிக்கிறது. ஒவ்வொரு நிமிடமும் 60 முறை அது ஒலிக்கும் போது 105 பேர் உலகத்தின் பல பகுதிகளில் மாண்டு போகிறார்கள். சாலையிலே நம்முன் கடந்து செல்லுகின்ற சவ ஊர்வலம் நொடிக்கு நொடி மனிதர் அழிந்து கிறிஸ்துவற்ற ஓர் நித்தியத்துக்குள்ளாக போய்க்கொண்டிருக்கிறார்கள் என்பதையே நமக்கு நினைவூட்டுகிறது. இரண்டாம் மரணத்தினின்று விடுவிக்கப்பட அவர்களில் அநேகருக்கு வாய்ப்பு தரப்படாமலேயே போய்விட்டது.

***நான்காவது***

நமக்குள்ளாக இருந்து வரும் அழைப்பு. நீங்கள் செய்து கொண்டிருக்கும் உலகப் பிரகாரமான வேலையின் மீது உங்களுக்குள் வளர்ந்து கொண்டே வரும் அதிருப்தி. தேவனுக்காக எதையாவது செய்ய வேண்டும் என்ற வளரும் வாஞ்சை.

இந்த நான்கு விளக்கங்களையும் ஒன்று கூட்டிப் பார்த்தால்; சாக்குபோக்குச் சொல்ல உங்களுக்கு இடமே இருக்காது.



2nd WEEK MESSAGE - OT - தரிசன களம்

REV. JOHNSON DANIEL

# பேதையான புறா
# யோனா



நீண்ட நாள் ஜெபித்துக் கொண்டிருந்த அவனுக்கு ஆண்டவர் தரிசனமானார். “நீ வேண்டியதை எல்லாம் கேள்! ஆனால் ஒன்றை நினைவில் கொள், நீ எதைக் கேட்டாலும், உன் பக்கத்து வீட்டுக்காரனுக்கு அது இரண்டு மடங்காகக் கொடுக்கப்படும்” என்றார். இந்த நிபந்தனையால் திடுக்கிட்டவன், எனக்கு ஒரு வாரம் டைம் (Time) வேண்டும் என்றான். ஒருவாரமாக தூக்கமின்றி யோசித்தவன், மீண்டும் தரிசனத்தில் வந்த ஆண்டவரிடம் சற்றும் தயக்கமின்றி “எனக்கு ஒரு கண் போகட்டும்” என்று கூறினான். அதற்கு ஆண்டவர் கொடுப்பதுதான் நிபந்தனை, எடுப்பது அல்ல என்று கூறி சென்றுவிட்டார்.

யோனாவுக்கும் இது மிகவும் பொருந்தும். நான்காவது சிறிய தீர்க்கதரிசியாக இடம் பெற்றிருக்கும் அவருடைய பெயருக்கு “புறா” என்று பொருள். ஆனால் தேவனுடைய சித்தத்துக்கு விலகினதால் “பேதையான புறா”வாக மாறிப்போனார்.

யோனாவின் சமகாலத்தின் யூதர்களைப் போலவே அவரும் தாங்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். எனவே, தாங்கள் மட்டுமே தேவனுக்குரியவர்கள் என்றும், இஸ்ரவேல் அல்லாத மற்ற புறஜாதியார் தேவனுடைய பார்வையில் அருவருப்பானவர்கள், ஏனென்றால் அவர்கள் விக்கிரக ஆராதனைக்காரர். எனவே தேவ கோபத்திற்கும் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கும் ஏதுவானவர்கள் என்ற யோனாவின் நம்பிக்கையே அவரைத் தேவ சித்தத்தினின்று விலகச் செய்தது. ஒருவேளை தேவனுடைய எச்சரிப்புக்குப் பயந்து நினிவேயின் ஜனங்கள் மனந்திரும்பினால் தேவ கோபாக்கினையிலிருந்து தப்பி விடுவார்களே என்ற அவருடைய எண்ணமே அவரை நினிவேக்கு போக விடாமல் தடுத்தது. எனவேதான் அவர் நினிவேக்குப் பதில் அதற்கு நேர் எதிர்த்திசையான தர்ஷீசுக்கு கப்பல் ஏறி, கூலியும் கொடுத்தார். அதுபோல நாமும் தேவ சமூகத்தைவிட்டு விலகினால் விலை கொடுக்கவேண்டியது அவசியம். நான்கு அதிகாரங்களைக் கொண்ட இப்புத்தகம் யோனாவின் மனநிலையையும், தேவனின் மன பாரத்தையும் வெளிப்படுத்துகிறது. இப்புத்தகத்தின் மையக்கருப்பொருள், “இரட்சிப்பு கர்த்தருடையது” (2:9b) என்பதாகும். கரிசனையுள்ள ஆண்டவர் எவரையும் இரட்சிக்க வல்லவர் என்பதுதான் இப்புத்தகத்தின் வலுவான செய்தியாகும்.

**நம்முடைய பிரசங்கம் அல்ல; தேவனே கிரியை செய்கிறார்.**

முதலாம் அதிகாரத்தில் தேவனை விட்டு விலகின யோனாவின் பயணம் எவ்வாறு பாதியில் முடிந்தது என்பதைக் காண்கிறோம். யோனாவுக்கு அந்தப் பயணம் பாதியில் முடிந்தாலும், தேவனை அறியாத அக்கப்பலின் மாலுமி உட்பட அனைவரும் அந்த அதிகாரத்தின் இறுதியில் தேவனை நோக்கி ஜெபித்து, அவருக்கு பலி செலுத்துவதோடு நிறைவடைகிறது. ஒருபுறம் தேவ சித்தத்திற்குத் தன்னை முற்றிலும் விலக்கின யோனாவையும், அதற்கு மாறாக தேவனிடம் தங்களைத் திருப்பின கப்பற்காரரையும் நாம் காண முடிகிறது. தேவன் எல்லோரையும் இரட்சிக்கவே விரும்புகிறார். இரண்டாம் அதிகாரத்தில் உணர்வடைந்த யோனா, மீனின் வயிற்றிலிருந்து தேவனை நோக்கி ஜெபிப்பதையும், பின் தேவனால் தப்பி கரை சேர்ந்ததையும் நாம் காண முடியும். தேவனிடம் திரும்பினால் எந்நிலையில் நாம் இருந்தாலும் மீட்பு உண்டு என்பதை இது நமக்குக் காட்டுகிறது. தேவனிடம் திரும்பவே அவர் விரும்புகிறார். மூன்றாம் அதிகாரத்தில், தேவனுக்குக் கீழ்ப்படிந்து நினிவே சென்ற யோனா நினிவேக்கு எதிராக பிரசங்கித்தான். ஆனால் அந்நகரின் மக்களோ மனந்திரும்பினர். நம்முடைய பிரசங்கம் அல்ல; தேவனே கிரியை செய்கிறார். இதைச்சற்றும் எதிர்பாராத யோனாவுக்கோ இது சங்கடத்தை ஏற்படுத்தியது. அதனால் தேவனிடம் சலித்துக் கொண்டவன், நினிவே பட்டணத்தின் அசீரியர்கள் அழிவதைக் காண அப்பட்டணத்தின் எதிரே கூடாரம் அமைத்துக் காத்துக்கிடக்கிறான். ஆனால் கர்த்தரோ, அவர்களை அழிவினின்று மீட்டு, இரட்சிக்க சித்தங்கொள்கிறார்.

இது புதிய ஏற்பாட்டின் மனந்திரும்பிய இளைய மகனின் உவமையை நமக்கு நினைவூட்டுகிறது. மனந்திருந்தி திரும்பி வந்த மகனை ஏற்றுக்கொள்ளும் தந்தையையும், இதனை ஏற்க மறுக்கும் மூத்த மகன், பிதாவின் சந்தோஷத்தில் பங்குபெறும் பாக்கியத்தை இழந்ததையும் காட்டுகிறது. அதேபோல் யோனாவும், ஆத்துமபாரம் கொண்ட ஆண்டவரின் சிந்தையை ஏற்க மறுத்து, அதற்குப் பதிலாக தான் மடிவதே மேல் என்று தன் நிலைப்பாட்டிலிருந்து மாறாமல் அவருக்கு மன சங்கடத்தை ஏற்படுத்துகிறார். ஆண்டவரின் ஆத்துமபாரம் நம் வாழ்வில் செய்த மாற்றம் என்ன? நம்மில் அந்த ஆத்துமபாரம் உண்டா? அல்லது நாமும் யோனாவைப் போல ஆண்டவருக்குப் பாரமாய் மாறிவிடுகிறோமா?

# அடுத்த ஊருக்கு போவோம் வாருங்கள்!



## தனக்பூர் பணித்தளம்
## சம்பாவத் மாவட்டம்
## உத்தரகாண்ட் மாநிலம்

**தனக்பூர் ஓர் அறிமுகம்:**

*இமயமலை சாரலில் உள்ள அழகிய மாநிலம் உத்தரகாண்ட். இது இம்மாநிலத்தின் தென்கிழக்கில் சீன எல்லையில் அமைந்துள்ள ஒரு நகராட்சி பட்டணம். இப்பட்டணத்திலிருந்து 3000 அடி உயரத்தில் அமைந்துள்ளது தனக்பூர். காளி சாரதா நதியில் பொங்கு நீர் சவாரி இங்கு பிரபலமானது. 2026ஆம் ஆண்டுபடி தோராயமாக 26 ஆயிரத்து 300 பேர் வாழ்கின்றனர். இவர்களில் 78.82 சதவீதம் கல்வி பெற்றுள்ளனர். ஆனால் ஆயிரம் ஆண்களுக்கு வெறும் 905 பெண்கள் மட்டுமே உள்ளனர். இங்கு ஆண்டு முழுவதும் சராசரியாக 15.2% வெப்பம் நிலவுகிறது.*

**தாரு மக்கள்:**

*தனக்பூர் பகுதியில் குமானிஸ், வால்மீகி மற்றும் தாருமக்கள் வாழ்கின்றனர். தாரு மக்கள் பழங்குடி வகுப்பை சேர்ந்தவர்கள். தாரு என்ற வார்த்தை "ஸ்தவீர்" என்ற வார்த்தையிலிருந்து மருவி வந்துள்ளது. "ஸ்தவிர்" என்றால் புத்த மதத்தை பின்பற்றுகிறவர்கள் என பொருள். இவர்கள் உத்தரகாண்ட், உத்தர பிரதேசம், பீகார் மற்றும் நேபாளத்திலும் வாழ்கின்றனர். இம்மக்கள் மத்தியில் ஊழியம் செய்ய வாஞ்சிக்கிறோம். தாரு மக்கள் "தாரு" அல்லது "தாருவாடி" என்ற மொழி பேசுகின்றனர். மூங்கில் மற்றும் மண் கொண்டு வீடு கட்டுகின்றனர். "பாரா" என்ற மந்திரவாதியை சுகம் பெற நாடுகின்றனர். அஸ்டிம்கி" என்ற சிறந்த ஓவியத்தை வரைகின்றனர்.*

*இவர்கள் அடிக்கடி மலேரியாவினால் பாதிக்கப்பட்டதனால் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவாக அரிவாள் செல் வியாதி (91%) மற்றும் தலசீமியா போன்ற பரம்பரை பாதிப்புகள் அதிகம் உண்டு.*

**அவசர தேவை:**

*சுமார் 4 ஆண்டுகளாக தனக்பூர் பணித்தளம் ஒரு மிஷனெரிக்காகக் காத்திருக்கிறது. சமீபத்தில் ஒரு சுதேச ஊழியர் தற்காலிகமாக அங்கு ஊழியம் செய்ய அனுப்பப்பட்டுள்ளார். ஒரு கலாச்சாரம் கடந்த மிஷனெரி இவரோடு சேர்ந்தால் ஊழியத்திற்கு இன்னும் வேகம் சேரும்.*

**ஜெபியுங்கள்:**

- *இந்த மலை நாட்டை எனக்கு தாரும் என அர்ப்பணிக்கும் அருட்பணியாளர்கள் எழும்ப...*
- *"சிக்கிள் செல்" போன்ற பரம்பரை வியாதிகள் மாற...*
- *மந்திரவாதிகளை நம்பும் தாரு மக்கள் சுகம் தரும் மெய்யான தெய்வத்தை நம்ப...*
- *எல்லா தாரு மக்களுக்கும் அவர்கள் தாய் மொழியில் வேதாகமம் கிடைக்க ஜெபியுங்கள்.*

Mr. Suriya Kumar



Mr. Benjamin & Dr. Ahima



# இத்தாலி

இத்தாலி, தனது ரோமானியப் பாரம்பரியத்தால் வடிவமைக்கப்பட்ட வரலாறு, கலாச்சாரம் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றில் செழுமையான ஒரு தேசம். கிறிஸ்தவத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாடுகளில் இதுவும் ஒன்றாகும். இதன் மக்கள்தொகையில் சுமார் 74% பேர் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களாக அடையாளம் காணப்படுகின்றனர். ரோமில் அமைந்துள்ள வத்திக்கான் நகரம் (Vatican City) கத்தோலிக்கத் திருச்சபையின் உலகளாவிய தலைமையகமாகவும், திருத்தந்தை போப்பின் வசிப்பிடமாகவும் திகழ்கிறது. இது இத்தாலியை ஒரு நாடாகவும், ஆன்மீக மையமாகவும் தனித்துவமானதாக ஆக்குகிறது. இயேசுவின் சீஷர்கள் மற்றும் பவுல் மூலம் கி.பி. 60களில், கிறிஸ்துவின் நற்செய்தி இத்தாலியை வந்தடைந்தது. ஆனாலும் இன்றும் ரோமன் கத்தோலிக்கமே இங்கு ஆதிக்கம் செலுத்தும் மதமாக உள்ளது. இது இத்தாலியின் கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் தேசிய அடையாளத்துடன் ஆழமாகப் பின்னிப் பிணைந்துள்ளது.

| | |
|---|---|
| தலைநகரம் | : ரோம் |
| நாணயம் | : யூரோ (EUR) |
| மொழிகள் | : இத்தாலியன் (அதிகாரப்பூர்வ) |
| அரசியல் அமைப்பு | : பாராளுமன்றக் குடியரசு |
| மக்கள் தொகை | : சுமார் 59 மில்லியன் |

**சிறப்பு ஜெபக்குறிப்பு:**

மே 1 ஆம் தேதி தொடங்கி, புனிதரின் திருவுருவம் ஒரு காளையால் இழுக்கப்படும் தங்க ரதத்தில் வைக்கப்பட்டு, காக்லியாரியிலிருந்து நோராவுக்குச் செல்லும் வழியில் மலர் இதழ்களைத் தூவியபடி பயணிக்கிறது. மிக நீண்ட மற்றும் மிக முக்கியமான புனிதப் பயணங்களில் ஒன்றான இது, நன்றியறிதலின் ஒரு நேர்த்திக்கடனாக 1656ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் இது நடத்தப்பட்டு வருகிறது. மூன்று நாட்களுக்கு, புனிதரின் பக்தர்கள் பக்தியுடனும், கொண்டாட்டத்துடனும் திருவுருவத்துடன் பயணிக்கின்றனர். மே 4 ஆம் தேதி இந்தப் பயணம் நிறைவடைகிறது. அன்று திருவுருவம் காக்லியாரியிலுள்ள அதன் தேவாலயத்திற்கு மரியாதையுடன் திருப்பி அனுப்பப்படுகிறது. இயேசு இவர்களின் ஆத்துமக் கண்களைத் திறக்க நாம் ஜெபிப்போம்.



**இத்தாலிக்கான ஜெபக்குறிப்புகள்:**

பண்டைய சடங்குகள் மற்றும் மூடநம்பிக்கைகள்:

- மரபுகள், சடங்குகள் மற்றும் மூடநம்பிக்கைகளால் நிறைந்திருக்கும் இத்தாலியர்கள், ஜீவனுள்ள கிறிஸ்துவை அறிந்து உண்மையான விடுதலையைப் பெற்றுக்கொள்ள ஜெபியுங்கள்.
- இங்குள்ள ரோமன் கத்தோலிக்க வழிபாட்டாளர்கள், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள்.

2025ஆம் ஆண்டு, ஜூலை 28 முதல் ஆகஸ்ட் 3 வரை ரோமில் நடைபெற்ற இளைஞர் ஜூபிலி (ஒரு இயக்கம்) என்ற நிகழ்வின்போது, உலகம் முழுவதிலுமிருந்து ஆயிரக்கணக்கான இளைஞர்கள் திருத்தந்தை போப்புடன் ஜெபிக்கவும், கொண்டாடவும், உறவாடவும் கூடினர். இந்த நிகழ்வுகளுக்கும், கொண்டாட்டங்களுக்கும் அப்பால், இந்த இளம் உள்ளங்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்று, அவருடைய அன்பை உணர்ந்து, நற்செய்தியின் துணிச்சலான சாட்சிகளாகத் தங்கள் தேசங்களுக்குத் திரும்ப வேண்டும் என்று நாம் ஜெபிப்போம்.

**இத்தாலியிலுள்ள இளைஞர்களுக்கான ஜெப விண்ணப்பங்கள்:**

- 20 முதல் 30 வயதுக்குட்பட்ட இத்தாலியர்களில் 35%க்கும் அதிகமானோர் வேலையில்லாமல் உள்ளனர். இது ஐரோப்பிய சராசரியைவிட இரண்டு மடங்கு அதிகம். 2008ஆம் ஆண்டு நிதி நெருக்கடிக்குப் பிறகு இந்த வேலையின்மை மோசமடைந்து, 2011ஆம் ஆண்டு பொருளாதார வீழ்ச்சியின் போது மீண்டும் இந்த வேலையின்மை உச்சத்தை அடைந்தது. இவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்புகள் கிடைக்க ஜெபிப்போம்.
- இத்தாலியில் ஜென் Z தலைமுறையினரிடையே பதட்டம், மனச்சோர்வு மற்றும் முறையற்ற உறவுகள் அதிகரித்து வருகிறது. இவர்கள் கிறிஸ்துவை அறிந்து பரிசுத்தமான வாழ்க்கை வாழ வேண்டுமென்று ஜெபிப்போம்.
- ஜெப வாழ்வானது கத்தோலிக்க மரபுகளால் பெரிதும் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஜெபிப்பவர்களில் பலர் இயேசுவை நேரடியாக நாடுவதை விட, புனிதர்களையே அடிக்கடி நாடுகின்றனர். இளைஞர்கள் அனைவரும் ஆண்டவராகிய இயேசு ஒருவரையே மகிமைப்படுத்த ஜெபிப்போம்.

**துதிக்குறிப்புகள்:**

இத்தாலியில் ஜனவரியில் நடைபெற்ற "சலேசிய குடும்ப கிறிஸ்தவ ஆன்மீக நாட்கள்". ஏப்ரலில் நடைபெறும் "உலக நன்றிப் பெருவிழாவிற்கான ஆயத்தங்கள்" மற்றும் இந்த அக்டோபரில் ரோமில் நடைபெறும் "பூமியின் கடைக்கோடிக்குச் செல் - இயேசு இளைஞர் மாநாடு" போன்ற கிறிஸ்தவ மாநாடுகளுக்காக எல்லாம் வல்ல ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோமாக. இந்த ஆயத்தங்களின் ஒவ்வொரு படியிலும் தேவன் தலையிட்டு வழிநடத்துவாராக. மேலும், கிறிஸ்துவை மையமாகக் கொண்ட மற்றும் கிறிஸ்துவின் ஊழியத்தை மையப்படுத்தி நடத்தப்படும் இந்தக் கூட்டங்கள், இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வம் என்பதை உலகம் முழுவதும் எடுத்துக் கூறட்டும்.

# சுதேச ஊழியர்களுக்கான சிறப்பு ஜெபக்கரிசனைகள்

**"தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார்."**
**(1 கொரிந்தியர் 12:28)**

அறுவடைக்கு வேலையாட்களை அனுப்பும்படி எஜமானனை வேண்டிக்கொள்ளுங்கள் என்பது இயேசு தனது சீஷர்களுக்குக் கொடுத்த ஒரு ஜெபக்குறிப்பு (மத். 9:35-38). அப்படியே நாம் நமது ஊழிய எல்லைகளில் வாழும் மக்கள் இனங்களுக்கு மத்தியிலுள்ள சபைகளிலிருந்து ஊழியர்களைத் தேவன் எழுப்பித் தர ஜெபிக்கும்போது, திரளான ஊழியர்களை உள்ளூர் சபைகளிலிருந்து கர்த்தர் எழுப்புகிறார். தேவனுக்கே மகிமையுண்டாவதாக. நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பணித்தளத் திருச்சபைகளிலிருந்து 1000க்கும் மேற்பட்ட உள்ளூர் சுவிசேஷகர்கள், போதகர்கள் மற்றும் தன்னார்வ ஊழியர்களைத் தேவன் எழுப்பி, தேவராஜ்ய விரிவுக்கென்று அவர்களை அவர்கள் மக்கள் மத்தியில் வல்லமையாகப் பயன்படுத்தியும் வருகிறார்.

இந்த சுதேச ஊழியர்களுக்காக தேவனைத் துதித்து, இவர்களுடைய நல்வாழ்வுக்காக நாம் கருத்தாய் ஜெபிக்க வேண்டும். இந்தியாவில் உள்ள அனைத்து மக்களினங்கள் மத்தியிலிருந்தும் தேவ ஊழியர்கள் அணி அணியாய் எழும்ப பாரத்தோடு ஜெபிப்போம்.

**துதிக்க...**

- ✦ நமது பணித்தள திருச்சபைகளிலிருந்து தேவன் எழுப்பியுள்ள சுமார் 1000க்கும் மேற்பட்ட சுதேச ஊழியர்கள் மற்றும் போதகர்களுக்காக தேவனைத் துதிப்போம்.
- ✦ இவர்கள் பகுதிநேர தன்னார்வ ஊழியர்களாக, முழுநேர ஊழியர்களாக, உள்ளூர் சபைப் போதகர்களாக அர்ப்பணத்தோடும், தரிசனத்தோடும் பல நிலைகளில் தங்கள் மக்கள் மத்தியில் ஊழியம் செய்து வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க...**

- ✦ தேவனுக்காகத் தங்களை அர்ப்பணித்து செயல்படும் சுதேச ஊழியர்கள் வேத சத்தியத்தில் உறுதிப்படவும், விசுவாசத்தில் வளரவும், பரிசுத்தத்தைக் காத்துக்கொண்டு முடிவுபரியந்தம் நிலைத்திருக்கவும் ஜெபிப்போம்.
- ✦ சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினரைத் தேவன் ஆசீர்வதிக்கவும், குடும்பமாக தேவ ஊழியத்தை நிறைவேற்றும் கிருபையைத் தேவன் அருளவும் ஜெபிப்போம்.
- ✦ சுதேச ஊழியர்கள் ஒவ்வொருவருக்கும் நல்ல சரீர ஆரோக்கியத்தையும், பிரயாண பாதுகாப்பையும் தேவன் கட்டளையிட ஜெபிப்போம்.
- ✦ சுதேச ஊழியர்களின் குடும்பத் தேவைகள் மற்றும் ஊழியத் தேவைகள் தடையின்றி சந்திக்கப்பட ஜெபிப்போம்.
- ✦ சுதேச ஊழியர்களின் சுக வாழ்வுக்கும், ஊழியப் பிரயாசங்களுக்கும் எதிர்மறையாக கிரியைச் செய்யும் பிசாசின் வல்லமைகள் முறியடிக்கப்பட ஜெபிப்போம்.
- ✦ அநேக மாநிலங்களில் சுதேச ஊழியர்களுக்கு எதிராக போடப்பட்டுள்ள மதமாற்ற குற்றச்சாட்டு, பொய் வழக்குகள் ரத்து செய்யப்பட ஜெபிப்போம்.
- ✦ சுதேச ஊழியர்களுக்கென்று முறையான வேதாகமம் மற்றும் தலைமைத்துவ பயிற்சிகள் நடத்தப்படவும், எதிர்கால திருச்சபைத் தலைவர்களாக அவர்கள் ஜெபத்தோடு உருவாக்கப்படவும் ஜெபிப்போம்.
- ✦ சுதேச ஊழியர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள ஊழிய பொறுப்புகளில் உண்மையோடு நடந்துக் கொள்ளவும், தேவனுக்கு முன்பாக எல்லா சூழ்நிலைகளிலும் உத்தமமாய் தங்களைக் காத்துக்கொள்ளவும் ஜெபிப்போம்.
- ✦ போதகர்களாக அபிஷேகிக்கப்பட்ட சுதேச ஊழியர்கள் போதகப்பணியை ஜெபத்தோடும், கருத்தோடும் செய்யவும், தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட மந்தைக்கு மாதிரிகளாயிருந்து வழிநடத்தவும் ஜெபிப்போம்.
- ✦ ஒவ்வொரு பிராந்தியங்களிலும் ஊழியம் செய்யும் சுதேச ஊழியர்கள் மத்தியில் ஒருமனப்பாடும், சகோதர சிநேகமும் நிறைவாகக் காணப்பட ஜெபிப்போம்.
- ✦ பிராந்திய மற்றும் பணித்தள ஊழியப் பொறுப்பாளர்களுடன் சுதேச ஊழியர்கள் இணக்கமாக நடந்து கொள்ளவும், பிரிவினை சிந்தனைகளுக்கு இடங்கொடாதிருக்கவும் ஜெபிப்போம்.
- ✦ பணித்தள சுதேச ஊழியர்கள் துர்உபதேசங்களுக்குத் தங்களை விலக்கிப் பாதுகாத்துக் கொள்ளவும், சபை மக்களை வேத சத்தியத்தில் தெளிவாக வழி நடத்தவும் ஜெபிப்போம்.
- ✦ இந்தியாவிலுள்ள அனைத்து இனமக்கள் மத்தியிலிருந்து ஆயிரமாயிரமாய் ஊழியர்களைத் தேவன் எழுப்பித் தர மன்றாடி ஜெபிப்போம்.

Dr. Godwin & Dr. Azubha

# எண்ணச் சுழற்சி கோளாறு

## (Obsessive Compulsory Disorder)



**என்ன?**

எண்ணச் சுழற்சி கோளாறு (OCD) என்பது, தேவையற்ற எண்ணங்கள் (Obsessions) மற்றும் திரும்பத் திரும்பச் செய்யப்படும் நடவடிக்கைகள் அல்லது மனச் செயல்கள் (Compulsions) ஆகியவற்றின் சுழற்சியால் வகைப்படுத்தப்படும் ஒரு மனநலப் பாதிப்பாகும். இந்த அறிகுறிகள் பொதுவாகத் தொடர்ச்சியாகவும், அதிக நேரம் எடுத்துக்கொள்ளக்கூடியதாகவும் இருப்பதுடன், அன்றாட வாழ்வில் குறிப்பிடத்தக்க மன உளைச்சலையோ அல்லது பாதிப்பையோ ஏற்படுத்துகின்றன. OCD பொதுவாக இளம் வயதுப் பருவத்தில் தொடங்குகிறது, ஆனால் இது குழந்தைப் பருவத்திலும் தொடங்கலாம்.

**ஏன்?**

இதன் சரியான காரணம் தெரியவில்லை. ஆனால் மரபியல் (genetics), மூளையின் அமைப்பு மற்றும் வேதியியல் மாற்றங்கள், மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்கள் ஆகிய பல காரணங்கள் இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

**எப்படி?**

**OCD இரண்டு முக்கிய கூறுகளால் விளக்கப்படுகிறது:**

**Obsessions (மீண்டும் மீண்டும் தோன்றும் எண்ணங்கள்):**

- மற்றவர்கள் தொட்டப் பொருட்களைத் தொடுவதால் மாசுபடுவோமோ என்ற பயம்.
- பொருட்கள் ஒழுங்காக இல்லாதபோது ஏற்படும் மன அழுத்தம்.
- வாகனத்தைப் போக்குவரத்து நெரிசலில் ஓட்ட பயம்.
- விரும்பாத பாலியல் சிந்தனைகள்.
- தனக்கோ அல்லது தன்னைச் சார்ந்தவருக்கோ ஏதாவது தீங்கு நேர்ந்துவிடுமோ என்ற பயம்.

**Compulsions (மீண்டும் செய்யப்படும் செயல்கள்):**

- அளவுக்கு மீறி கைகளைக் கழுவுதல் அல்லது சுத்தம் செய்தல்.
- கதவுகள் அல்லது மின்சாதனங்களை மீண்டும் மீண்டும் சரிபார்த்தல்.
- குறிப்பிட்ட முறையில் எண்ணிக்கை எண்ணுதல்.
- பொருட்களை "சரியாக" அமைத்தல்.
- பிறரிடமிருந்து அடிக்கடி எதையாவது உறுதிப்படுத்த கேட்டுக்கொண்டேயிருத்தல்.

**OCD குணமாகுமா?**

OCD என்பது நீண்டகால நிலை (Chronic) ஆகும். இதில் கடுமையான அறிகுறிகள் வரும் காலங்களும், பின்னர் சற்று குறையும் காலங்களும் இருக்கும். சிகிச்சை மூலம் வாழ்க்கைத் தரமும், செயல்திறனும் மேம்பட முடியும். இது பொதுவாக Y-BOCS மதிப்பெண்கள் மூலம் கண்காணிக்கப்படுகிறது. சிகிச்சைக்கு பதிலளிக்காத OCDக்கு transcranial magnetic stimulation அல்லது கடைசி வழியாக deep brain stimulation போன்ற அறுவை சிகிச்சை முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

**புள்ளிவிவரங்கள்:**

1. OCD உலகளவில் 4வது பொதுவான மனநலக் குறைபாடாகும்.
2. இந்தியாவில் OCD பரவல் சுமார் 0.6% ஆகும்.
3. OCD ஆரம்பிக்கும் சராசரி வயது 19 (7 - 35 வயது வரை).
4. இந்தியாவிலும் மற்றும் உலகம் முழுவதும், OCD பல நேரங்களில் major depressive disorder, generalized anxiety disorder, ADHD போன்ற பிற நிலைகளுடன் இணைந்து காணப்படுகிறது.
5. 2025இல் வெளியான ஓர் இந்திய மருத்துவ மாணவர்கள் ஆய்வில், சுமார் 29% பேருக்கு OCD அறிகுறிகள் இருக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது கடுமையான கல்வி அழுத்தத்துடன் தொடர்புடையதாக கருதப்படுகிறது.
6. சமூக விமர்சனத்தின் பயம் காரணமாக, இந்தியாவில் பலர் தங்கள் OCD அறிகுறிகளைக் குடும்பத்தினருக்கும், மருத்துவர்களுக்கும் தெரிவிக்காமல் இருக்கின்றனர்.

**ஜெபக்குறிப்புகள்:**

- கர்த்தர் இவர்களுக்கு அமைதியான மன நிலையையும், நிலையான உள்ளத்தையும் கொடுக்க ஜெபிப்போம்.
- திடீர் எண்ணங்களால் கலங்கும் மனதைக் கர்த்தர் அமைதிப்படுத்தும்படியாய் ஜெபிப்போம்.
- OCD ஏற்படுத்தும் பயங்களை எதிர்கொள்ளத் தேவையான வலிமையை இவர்கள் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
- பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரும், நண்பர்களும் உண்மையான ஆதரவை இவர்களுக்கு வழங்கவும், இவர்களுடன் இருப்பவர்களுக்கு தேவன் ஞானம், பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையை கொடுக்கவும் ஜெபிப்போம்.
- இவர்கள் தங்கியிருக்கும் வீடு, இவர்களுடன் இருக்கும் உறவுகளின் மூலம் பாதுகாப்பு மற்றும் மன அழுத்தமின்றி சுதந்திரமாக வாழும் சூழலைக் கர்த்தர் இவர்களுக்கு அமைத்துத் தர ஜெபிப்போம்.

விடியலுக்குக் காத்திருந்த மக்களுக்கு விடியலைக் கொடுத்த அருட்பணியாளர்

# ஓர் இனிய உரையாடல்

## அருட்திரு. G. சாமுவேல் சுப்பிரமணி



**அருட்பணியாளரின் அறிமுகம்:** என்னுடைய பெயர் G. சாமுவேல் சுப்பிரமணி, என்னுடைய மனைவியின் பெயர் சுசீலா சாமுவேல். எங்களுக்கு ஒரு மகன், ஒரு மகள். இவர்களுக்குத் திருமணமாகிவிட்டது. இரண்டுபேரும் ஊழியத்தில் ஈடுபட்டுள்ளனர். நாங்கள் மிஷனெரிகளாக Kukna, Bhil, Varli, Koli, Dhodiya போன்ற Tribes மத்தியில் 43 ஆண்டுகளாக பணி செய்து தற்போது ஓய்வு பெற்று கோயம்புத்தூரில் வசித்து வருகிறோம்.

**கேள்வி: உங்களுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சை எப்படி ஏற்பட்டது?**

**அருட்பணியாளர் பதில்:** என்னைக் கிறிஸ்துவுக்குள் வழி நடத்தின பாஸ்டர். வெஸ்லி துரைராஜ் என்பவர் வேதத்தின் அடிப்படையிலும், தன்னுடைய அனுபவ சாட்சியின் மூலமாகவும் என்னுடைய பல கேள்விகளுக்கு பதில் தந்தார்கள். மேலும் அவர் வேத வசனத்தைக் கற்று அவற்றைப் போதிப்பதற்கும், பாடல் ஊழியம் செய்வதற்கும் எவ்வளவு தேவை உள்ளது என்பதை எங்களுக்குத் தெளிவாக விளக்கினார். இதன்மூலம் கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சை ஏற்பட்டது.

**கேள்வி: நீங்கள் மிஷனெரியாக செல்ல எப்படி ஒப்புக்கொடுத்தீர்கள்?**

**அருட்பணியாளர் பதில்:** இதனைக் கண்ட பாஸ்டர். வெஸ்லி துரைராஜ் அவர்கள் நீங்கள் Bethel (Salem), Danishpetஇல் உள்ள Bethel Bible Instituteஇல் சேர்ந்து படித்து, வட இந்தியா சென்று ஊழியம் செய்யலாம் என்று ஆலோசனை வழங்கினார்கள். ஆகவே நான் Bachelor of Mission Service என்ற ஒரு வருட Courseஐ படிக்கலானேன். அப்பொழுது FMPB Promotional Secretaries சிலர் B.B.I Collegeக்கு வந்து, வட இந்தியாவில் ஊழியம் செய்ய ஊழியர்களின் அவசியத்தை சில படக்காட்சிகள் மூலம் விளக்கினார்கள். அதாவது U.Pஇல் தங்கள் பாவம் போக்க வயதானவர்களை ஓடும் கங்கை நதியில் எறிந்துவிடுகின்றனர். அவர்கள் செத்துப் பிணமாக மிதக்கும்போது, அதின்மேல் கழுகுகள் உட்கார்ந்து அதைச் சாப்பிடுவதால் பாவம் நீங்கிவிடுகிறது என்று நம்புகின்றனர். இந்த 20ஆம் நூற்றாண்டிலும் இப்படிப்பட்ட மனிதர்கள் வாழ்கிறதை கேள்விப்பட்ட நான், தேவனுடைய ஊழியத்தை அங்கு சென்று செய்ய வேண்டுமென்ற பாரத்தோடு மிஷனெரியாகச் செல்ல என்னை ஒப்புக்கொடுத்தேன்.

**கேள்வி: மிஷனெரி ஊழியத்தில் நீங்கள் சந்தித்த சவால்கள் என்ன?**

**அருட்பணியாளர் பதில்:** நான் மிஷனெரியாக வந்த பிறகு பணித்தளத்தில் நான் சந்தித்த பாடுகள், போராட்டங்கள் அதிகம். அங்கு தங்க வீடு கிடைப்பதில் பிரச்சினை, கோடையில் தண்ணீர்ப் பஞ்சம் கடுமையாக இருந்தது. மேலும் கரடுமுரடான பாதை, சரியான வாகன வசதி இல்லாததால் பல மைல் தூரம் கால்நடையாகச் சென்றுதான் ஊழியம் செய்ய வேண்டிய நிலையிருந்தது. அங்குள்ள மக்கள் படிப்பு மற்றும் எல்லாவற்றிலும் பின்தங்கியவர்களாக இருந்ததால், எதையும் எளிதில் புரிந்துக்கொள்ள முடியாதவர்களாக இருந்தனர். இவை எல்லாவற்றையும் தாண்டி இவர்கள் நடுவே ஊழியம் செய்யும்போது ஊர்த் தலைவர்கள் மற்றும் பூசாரிகள் மூலமாக எதிர்ப்பு ஏற்பட்டு, அநேக முறை அடிபட்ட நாட்களும் உண்டு. இவற்றின் நடுவிலும் தேவன் வல்லமையாக ஊழியம் செய்ய கிருபைக் கொடுத்தார்.

**கேள்வி: உங்கள் மிஷனெரி ஊழியத்தால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட விளைவுகள் என்ன?**

**அருட்பணியாளர் பதில்:** நான் ஊழியம் செய்த இடங்களிலுள்ள எல்லா மக்களும் மேம்பாடு அடைய வேண்டும் என்பதே என் நோக்கமாக இருந்தது. அங்குள்ள விசுவாசிகளின் உதவியால் சபைகளை நிறுவ முடிந்தது. மேலும் மக்கள் தாங்களே சுயமாக நிற்பதிலும், சிந்திப்பதிலும், நற்செய்தி அறிவிப்பதிலும் 60% முன்னேறியுள்ளனர். எங்கள் ஊழியத்தின் மூலம் அநேகர் ஊழியர்களாக எழும்பினர். முக்கியமாக திலிப்பாய், ராஜேஷ்பாய், நைனாபேன், அனில்பாய் இவர்கள் குடும்பமாக மிஷனெரி பணிக்காக தங்களை அர்ப்பணித்தனர். மேலும் அநேக Missionary Sponsors மற்றும் Child Sponsorsஐ கர்த்தர் எழுப்பித் தந்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

அன்பு வாலிபப் பிள்ளைகளே! இவர்களைப் போன்று கர்த்தரை அறியாத ஜனங்கள் இன்னும் அநேகருண்டு. இவர்களை அழிவிலிருந்து மீட்டெடுக்க நீங்கள் முன்வருவீர்களா? கர்த்தர் உங்களைத் தம் இருகரம் நீட்டி அழைக்கிறார். கர்த்தருடைய பணியைச் செய்ய முன்வாருங்கள்!

**ஜெபிக்க :**

- Kukna, Bhil, Varli, Koli, Dhodiya போன்ற இம்மக்கள் அனைவரும் உண்மையான தேவனை அறிந்துக்கொள்ள...
- சுவிசேஷம் அறிவிப்பதில் வரும் தடைகள் நீங்கி, சந்திக்கப்படாத கிராமங்கள் சந்திக்கப்பட...
- விசுவாசிகள் பின்மாற்றம் அடையாதபடி, தொடர்ந்து ஆலய ஆராதனைகளில் பங்குக்கொள்ள...
- அநேக வாலிபர்கள் முழு நேர ஊழியர்களாக எழும்பிவர ஜெபிப்போம்.

Mrs. Jeba Saral



# Bhajan Clubbing

இவை Genz மற்றும் Millennials அதிகமாக போற்றும் ஓர் trending ஆன ஆன்மீகக் கூடுகையாக பார்க்கப்படுகிறது. குறிப்பாக இரவு நேரங்களில், பஜனைக் கவிகளை ஒருவர் பாட, அவற்றை கூட்டத்தில் இருக்கிறவர்களும், ஒருசேர கைதட்டி, பாடி, ஆடுவதை தான் நாம் “Bhajan Clubbing” என்று அழைக்கிறோம். கிட்டத்தட்ட “கிறிஸ்தவ கான்சர்ட்டுகள் (Christian Concert)” போல் அவை காணப்படுகிறது. இவை “spiritual club night” மற்றும் “sacred clubbing” போன்ற ஈர்க்கும் வசைச் சொற்களால் இளைஞர்களைத் திசை திருப்புகிறது. Bookmyshow போன்ற Appகளில் இந்நிகழ்ச்சிகளுக்கான டிக்கெட் விற்பனையாகின்றன. இதை பிரதமர் மோடி அவர்களே ஆதரித்து பல tweetகளை வெளியிட்டுள்ளார். நம் நாட்டில் பல இளம் தம்பதியினர், தங்கள் தினசரி வேலைகளை ராஜினாமா செய்து, இந்த பஜன் கிளப்பில் பாடுவதையும், இசை அமைப்பதையும் ஒரு தொழிலாக எடுத்து செய்ய ஆரம்பித்திருக்கின்றனர். சமீபத்தில் பெங்களூரில் நடந்த முதல் பஜன் கிளப்பை சுமார் 50,000 பேர் இணையதளத்தில் மட்டும் பார்த்திருக்கின்றனர். 2000 பேர்களுக்கு மேல் நேரடியாக அதில் கலந்து கொண்டுள்ளனர். அம்பானி குடும்பத்தினர் தங்களது மகன் பிறந்த நாளில், ஒரு பெரிய பஜன் கிளப்பை ஏற்பாடு செய்து, அதில் பல விருந்தினர்களை அழைத்துக் கொண்டாடினர். அன்று, நாம் சிறுவர், இளம் வாலிபர் கூடுகைகளை ஏற்பாடு செய்து, தேவனைத் துதித்து பாடின காலங்கள் சென்று, இன்று நம் தேசத்தில் அந்நிய தேவர்களைத் தேடும் “Bhajan Clubbing”ஆக மாறி இருக்கிறது.

## ஜெபக்குறிப்புகள்:

- இவ்வகையான பஜன் கிளப்புகளைப் பொறுப்பெடுத்து நடத்தும் ISKCON, Nirvana Station, Alive experiences, Rashi Entertainments, Backstage siblings போன்ற அமைப்புகளுக்காக ஜெபிப்போம்.
- இது அதிகம் நடைபெறும் மாநிலங்களான பெங்களூர், சென்னை, விசாகப்பட்டினம், கோவா, கொல்கத்தா, டெல்லி, மும்பை போன்ற இடங்களில் உள்ள Genz மற்றும் Millennialsஇன் இரட்சிப்புக்காக நாம் ஜெபிப்போம்.
- தொய்வுற்றுக் காணப்படும் வாலிபர்கள் மற்றும் இளம் வாலிபர்களின் கூடுகைகளுக்காக, முழு இரவு ஜெபங்களுக்காக, எழுப்புதல் கூட்டங்களுக்காக ஜெபிப்போம்.
- வாலிபர்களைக் கூட்டங்களுக்கு செல்லவிடாமல் அவர்களைத் தடுத்து நிறுத்தும் சமூக ஊடகங்கள் மற்றும் online games ஆகியவற்றிலிருந்து விடுபட ஜெபிப்போம்.
- தேவன் இளம் வாலிபர்கள் மற்றும் வாலிபர்களிடையே ஓர் எழுப்புதலின் அக்கினியைப் பற்றி எரியச் செய்ய ஜெபிப்போம்.
- பெற்றோர்கள், பிள்ளைகளைப் படிப்பிற்கும், பல விளையாட்டு வகுப்புகளுக்கும் அனுப்புகிறது போல, ஆவிக்குரிய கூட்டங்களுக்கும் உற்சாகமாய் அனுப்ப ஜெபிப்போம்.
- ஒரு பட்டப்படிப்பிற்கு எவ்வாறு மூன்றிலிருந்து ஐந்து ஆண்டுகள் பயிற்சி தேவையோ, அதுபோல கிறிஸ்தவ வாழ்க்கைக்கும், பரலோகத்திற்கு செல்லவும் பயிற்சி தேவை என்பதை உணர்ந்து வாலிபர்களும், இளம்வாலிபர்களும் ஆவிக்குரிய கூட்டங்களுக்கு செல்ல ஜெபிப்போம்.
- கூட்டங்கூட்டமாக பஜன் கிளப்புகளுக்குச் செல்லும் கால்கள், இயேசுவின் அன்பினை உணர்ந்து, அவரிடம் ஓடிவரும் கால்களாக மாற நம் முழங்கால்களை முடக்கி ஜெபிப்போம்.
- இந்தியாவில் மட்டுமல்லாமல் U.S, U.K போன்ற தேசங்களிலும் வேகமாக பரவி வரும் இவற்றை தேவன் தடுத்து நிறுத்த நாம் ஜெபிப்போம்.
- பஜன் கிளப்பிற்கு ஆதரவைத் திரட்டும் வகையில், தெருக்களில் நடைபெறும் “Bhajan Rallies”காகவும், அவற்றுக்குத் துணை போகும் போலீஸ் மற்றும் அமைச்சர்களுக்காகவும் மன்றாடுவோம்.

# உங்க சாமி எங்க பாஷையில பேசுவாரா?

(வேதாகம மொழி பெயர்ப்புப் பணி)

## வசாவி மொழி



இந்தப் பகுதியின் மூலமாக ஒவ்வொரு மாதமும் உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த மாதம் வசாவி மொழியைப் பற்றியும், சபை வளர்ச்சியில் வசாவி மொழியில் வேதாகமம் பற்றியும் சற்று ஆராய்வோம்.

### வசாவி ஊழிய அறிமுகம்:

1980ஆம் ஆண்டு நாசிக்கில் 3 மாத பொது மொழியியல் பாடநெறியைக் கற்றுத் தேர்ந்து வசாவி மொழியில் வேதாகம மொழிபெயர்ப்புப் பணி, கர்த்தரின் வழிநடத்துதலால் 1981ஆம் ஆண்டின் இறுதியில் திரு. ராஜேந்திரன் அண்ணன் மற்றும் அவர்களின் துணைவியார் திருமதி. லீலாபாய் அக்கா அவர்களால் தொடங்கபட்டது.

1981 மார்ச் மாதத்தில் FMPB நிர்வாகத்தில் இணைந்து உனை பகுதியில் குஜராத்தி மொழியைக் கற்றுக்கொண்டு, மகாராஷ்டிராவிலுள்ள வார்லி, கோலி மக்கள் மற்றும் குஜராத்தில் உள்ள தோதியா மக்களிடையே 200 சொற்களின் பட்டியலைக் கொண்டு ஒரு ஆரம்ப மொழியியல் ஆய்வு செய்தார்கள். 1981ஆம் ஆண்டில் வார்லி, கோலி மற்றும் தோதியா மக்களிடையே பெரிய அளவில் மாற்றம் இல்லாததால், எந்த மொழியைத் தேர்வு செய்வது என்பது மிகவும் கடினமாக இருந்தது. அதே நேரத்தில், FMPBஇன் முன்னோர்கள் திரு. அலைச்சாமி பால் அண்ணன் மற்றும் திரு. கிறிஸ்டோபர் தாமஸ் அண்ணன் ஆகியோர் முறையே குக்னா மற்றும் சௌத்ரி மக்களிடையே மொழிபெயர்ப்புப் பணியைத் தொடங்கியிருந்தனர். அந்தக் குழுக்களில் பெரிய அளவில் மக்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டிருந்ததால், அந்த மொழியில் வேதாகம மொழிபெயர்ப்புப் பணிக்கு முன்னுரிமைக் கொடுத்தனர்.

### வசாவா மக்களைத் தேர்ந்தெடுப்பு:

1981 அக்டோபரில் உனை பகுதியில் ஒரு உபவாச ஜெபக்கூட்டம் நடந்தது. அந்த கூட்டத்திற்கு டெடியாபாடாவில் இருந்து மிஷனெரி திரு. நேசமணி அண்ணன் வந்திருந்தார்கள். அவர் வசாவா மக்களிடையே ஊழியம் செய்யும் வாய்ப்புகளைப் பற்றி கூறினார். ஜர்காம் கிராமத்தில் 1981 செப்டம்பரில் ஒரு சிறிய தேவாலயம் கட்டப்பட்டது என்றும், பலர் இயேசுவை ஏற்றுக்கொண்டு பாப்டிசம் (Baptism) பெற்றுள்ளனர் என்றும் தெரிவித்தார். வசாவா மக்கள் பேசும் மொழி குஜராத்தியிலிருந்து மிகவும் வேறுபட்டது என்றும் அவர் கூறினார். இதனால், 1981 டிசம்பரில் திரு. அலைச்சாமி பால் அண்ணனும் திரு. இராஜேந்திரன் அண்ணனும் டெடியாபாடாவுக்குச் சென்று ஆய்வு செய்து அதன் மூலம் வசாவி மொழி மிகவும் தனித்துவமானது என்று உணர்ந்து, வசாவி மொழியில் வேதாகம மொழிபெயர்ப்பைத் தொடங்க முடிவு செய்து, நிர்வாகத்திடம் அனுமதி பெற்றார்கள்.

### ஆரம்ப கால சவால்கள்:

1982 ஜனவரியில் டெடியாபாடாவிற்கு குடிபெயர்ந்தபோது, அவர்கள் கிறிஸ்தவர்கள் என்ற காரணத்தால் வீட்டை வாடகைக்கு தர மறுத்துவிட்டார்கள். பின்னர் ஜர்காம் கிராமத்தில் ஒரு எளிய வீட்டில் தங்கியிருந்து மொழியைக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தார்கள். மின்சாரம், கழிப்பறை போன்ற வசதிகள் இல்லாமல் வாழ்ந்தது அவர்களுக்கு மிகவும் சவாலாக இருந்தது.

### முன்னேற்றம் மற்றும் சாதனைகள்:

1982 முதல் பல ஆண்டுகள் வசாவி மொழியைக் கற்றுக்கொண்டு, உள்ளூர் மக்களின் உதவியுடன் மொழிபெயர்ப்புப் பணியை, 2003 அக்டோபரில் வசாவி அம்பூரி மொழியில் புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களை மொழிபெயர்த்தார்கள். 2008 டிசம்பரில் அது வெளியிடப்பட்டது. அச்சிடப்பட்ட புதிய ஏற்பாட்டின் 2000 பிரதிகளும் முழுமையாக விநியோகிக்கப்பட்டன.

பின்னர் வசாவி தேவ்வாலி மொழியிலும் புதிய ஏற்பாடு 2011இல் வெளியிடப்பட்டது. காந்தேஷ் பகுதி மக்களுக்காக தேவநாகரி எழுத்தில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு வருகிறது. சுகவீனம் காரணமாக திரு. லீலாபாய் அக்கா அவர்கள் தேவ இராஜ்யம் அடைந்தார்கள்.

### துதிப்போம்:

- ★ வயது வந்தோருக்கான எழுத்தறிவு புத்தகங்கள் தயாரிக்கப்பட்டதற்காக...
- ★ முகாம் முறையில் கல்வி வழங்கப்பட்டதற்காக...
- ★ 2012இல் லூக்கா வீடியோ தயாரிக்கப்பட்டதற்காக...
- ★ வசாவி வேதாகமம் இப்பொழுது மொபைல் ஆப்பில் (Mobile App) கிடைக்கப்பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்

### ஜெபிப்போம்:

- ★ தற்போது நடைபெற்றுவரும் பழைய ஏற்பாடு மொழிபெயர்ப்பு குறித்த நேரத்தில் முடிக்கப்பட்டு வெளிவர...
- ★ 2030க்குள் முழு வேதாகமத்தையும் வெளியிட வேண்டும் என்ற நோக்கம் நிறைவேற...
- ★ மற்ற வசாவி வழக்குமொழிகளிலும் வேதாகமம் வெளியிட வேண்டும் என்ற திட்டம் நிறைவேற ஜெபிப்போம்.

**அன்பு வாலிபப் பிள்ளைகளே!**

**இந்த தொடரோட்டத்தில் உங்களின் பங்கு என்ன? உயிரோடு எழுந்த இயேசு கிறிஸ்து உங்களை இந்த ஊழியத்திற்கு அழைக்கும் சத்தம் உங்கள் காதுகளில் தொனிக்கவில்லையா? விலைக் கிரயம் கொடுத்து மீட்டெடுத்த இயேசுவிற்காக நீங்கள் என்ன காணிக்கையை அவருக்கு செலுத்தப் போகிறீர்கள்? சிந்திப்பீர்!**

# VIRAL NEWS பரபரக்கும் களத்தில் உன் விண்ணப்பம்...




## BETRAYAL OF THE BADGE

- பேரணி ஒன்றின்போது இளைஞர் ஒருவர் காவல்துறையினரால் கடுமையாக தாக்கப்பட்டார்.
- பொதுமக்கள் நியாயமற்ற முறையில் காவல்துறையினரால் தாக்கப்படுவது நிறுத்தப்படவும், காவல்துறையினர் நீதியும், நேர்மையும், உண்மையுமாய் நடந்துக்கொள்ள ஜெபிப்போம்.

## COUNTDOWN TO SPLASHDOWN

- Artemis II விண்வெளி வீரர்கள் வெற்றிகரமாக கடலில் இறங்கி மீண்டும் பூமிக்குத் திரும்பியதை அமெரிக்கா கொண்டாடியது.
- விண்வெளி வீரர்களின் ஆரோக்கியத்திற்காக நாம் ஜெபிப்போம். மனித உயிர்களைப் பாதுகாக்க விண்வெளி வீரர்கள் மிகத் துல்லியமான கவனத்துடன் இருப்பதுபோல, உலகத் தலைவர்களும் மக்களைப் பாதுகாக்க, மக்களுக்காக எடுக்கப்படும் திட்டங்களில் கவனத்துடன் செயல்பட ஜெபிப்போம்.









## THE IPL PARADOX

- IPL ஏலங்களில் நூற்றுக்கணக்கான கோடிகள் பரிமாறப்படுகின்றன. ஆனால், அதற்கான உண்மையான விலையை பெரும்பாலும் செலுத்துபவர்கள் ரசிகர்களே. அவர்கள் தங்களின் சொந்த நிதி மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியைப் புறக்கணித்துவிட்டு, அணி மீதான விசுவாசத்திற்காகத் தங்கள் நேரத்தையும், ஆரோக்கியத்தையும் தியாகம் செய்கின்றனர்.
- பொழுதுபோக்கை விக்கிரக வழிபாடாக மாற்றும் அடிமைத்தனத்தின் ஆவியிலிருந்து மக்கள் வெளிவர ஜெபிப்போம்.

## NBA'S NEW MINISTRY

- சமீப காலங்களில் பல NBA வீரர்கள், கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தை வெளிப்படையாக பேசுவதற்காக தங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி, நம்பிக்கையுடன் செயல்பட்டு, வளர்ந்து வரும் இயக்கத்தில் முக்கியமான நபர்களாக மாறியுள்ளனர்.
- இந்த விளையாட்டு வீரர்கள் தங்கள் தீர்மானங்களில் உறுதியாக நிலைத்து நின்று, உலகத்திற்கு முன்மாதிரியாக, தைரியத்துடன் நடக்க ஜெபிப்போம்.







## EASTER BLOODBATH

- வடக்கு நைஜீரியாவில் ஒருங்கிணைந்த தாக்குதல்கள் நடைபெற்று, குறைந்தது 33 பேர் உயிரிழந்ததுடன், பெருமளவு கடத்தல்களும் இங்கு நடைபெற்றுள்ளது. இந்நிகழ்வு கிறிஸ்தவ சமூகத்தை பெருந்துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.
- பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கர்த்தர் மன ஆறுதலைக்கொடுத்து, அவர்கள் துக்கம் நீங்கி சந்தோஷமும், நிம்மதியும் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம். மேலும் கடத்தப்பட்ட 150க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பாக விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

# வைராக்கியமும், துணிச்சலும்

கடந்த மாதம், கடுமையான எதிர்ப்பின் மத்தியில் பவுல் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைத் துணிவோடு அறிவித்ததைக் கண்டோம். எனினும், புறஜாதியாரிடையே பணியாற்றுவதற்கான ஒரு மாதிரியைத் தேவன் அவருக்குக் கொடுத்தார். அவர் சென்ற இடமெல்லாம் அதை வெற்றிகரமாகப் பின்பற்றினார். இந்த மாதம், தேவன் தனது ஊழியரை மேலும் கடுமையான எதிர்ப்பை எதிர்கொள்ள எவ்வாறு உதவினார் என்பதைப் பார்க்கப் போகிறோம். உயிருக்கு ஆபத்தான சூழ்நிலையை எதிர்கொண்ட போதிலும், பவுலும், பர்னபாவும் தாங்கள் நாட்டிய திருச்சபைகளை ஸ்தாபிக்கச் செய்வதில் மாறாத கவனத்துடன் துணிச்சலாகச் செயல்பட்டனர்.

பிசிதியாவின் அந்தியோகியாவில் யூதர்களின் எதிர்ப்பு அதிகரிக்கத் தொடங்கியபோது, பவுல் அண்டை மாவட்டமான லிக்கவோனியாவுக்கு (Lycaonia) செல்ல முடிவு செய்தார். ஆனால் செல்வதற்கு முன், அவர் நம் கர்த்தராகிய இயேசுவின் ஆலோசனையைப் பின்பற்றி, தனது கால்களில் படிந்த தூசியை உதறிவிட்டார் (அப். 13:51). இது எதிர்க்கும் யூதர்களுக்கு, அவர்களின் செயல்கள் கொடிய பாவம் என்பதையும், நற்செய்தியைப் புறக்கணித்ததற்காக அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்பதையும் நினைவூட்டியது (மத். 10:14). பின்னர், பவுலும், பர்னபாவும் இக்கோனியா, லீஸ்திரா, தெர்பை நகரங்களுக்குச் சென்றனர்.

இக்கோனியாவில், அவர்கள் தங்கள் வழக்கப்படி யூத ஜெப ஆலயத்திற்குச் சென்று, நற்செய்தியை அறிவித்தார்கள் (அப். 14:1). வழக்கம்போல, பல யூதர்களும், கிரேக்கர்களும் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டனர். இருப்பினும், விரைவில் நம்பாத யூதர்கள் களத்திலிறங்கி பவுலின் முயற்சிகளை முறியடிக்கத் தொடங்கினர். தங்களைக் கல்லால் அடிக்க யூதர்கள் முயற்சிப்பதைப் பவுலும், பர்னபாவும் அறிந்தபோது, அவர்கள் லீஸ்திரா மற்றும் தெர்பைக்குத் தப்பிச் சென்றனர் (அப். 14:6). வாய்மொழி எதிர்ப்பு உடல்ரீதியாக மாறியது. ஆனாலும், தேவன் தமது ஊழியர்களைப் பாதுகாத்தார்.

லீஸ்திராவில், பிறப்பிலிருந்து முடமான ஒரு மனிதனை நடக்கச் செய்த பெரிய அற்புதத்தை ஆண்டவர் பவுல் மூலம் செய்தார். எனினும், இத்தகைய ஆச்சரியமூட்டும் அற்புதம் எதிர்பார்த்த முடிவைத் தரவில்லை. பவுல் கொண்டு வந்த செய்தியை நம்புவதற்குப் பதிலாக, மக்கள் அவரையும் பர்னபாவையும் தெய்வங்களைப் போல கனப்படுத்த முயன்றனர். மக்களின் தவறான புரிதலை அவர்கள் அறிந்தபோது, மிகவும் வேதனைப்பட்டனர். தங்களை கனப்படுத்துவதிலிருந்து மக்களைத் தடுத்தனர் (அப். 14:8-18). பல முறை, அற்புதங்களே அவிசுவாசத்தை மாற்றுவதற்கான தீர்வு என்று நாம் நினைக்கிறோம். ஆனால் இந்த சம்பவத்திலிருந்து, ஆண்டவர் மக்களின் மனதைத் திறக்காவிட்டால், அவர்கள் இரட்சிப்பின் செய்தியைப் புரிந்துகொள்ள மாட்டார்கள் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுகிறோம்.

குழப்பம் மற்றும் முட்டுக்கட்டையின் தருணத்தைப் பயன்படுத்தி, அந்தியோகியா மற்றும் இக்கோனியாவிலிருந்து வந்த எதிர்க்கும் யூதர்கள், பவுலைக் கல்லால் அடித்து, அவர் இறந்துவிட்டார் என்று எண்ணி, நகரத்திற்கு வெளியே இழுத்துச் சென்றனர் (அப். 14:19). தேவன் பவுலுக்கு உடல்ரீதியாகவும், ஆவிக்குரியரீதியாகவும் மீண்டும் உயிர் கொடுத்து கிருபை பாராட்டினார். இந்த சம்பவம், அவர் எதிர்கொள்ளும் சிரமங்களின் தீவிரத்தைப் பொருட்படுத்தாமல், தன்னைத்தானே அல்ல, தேவனையே முழுமையாகச் சார்ந்திருப்பதைப் பவுலுக்குக் கற்றுக் கொடுத்தது (2 கொரி. 1:9). இவ்வாறு, தேவபக்தியுள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் வாழ்க்கையில் வருகின்ற வலியும், துன்பமும் அவர்களை ஒருபோதும் நசுக்குவதில்லை; மாறாக தேவனின் மீதான அவர்களின் பற்றுதலை அதிகப்படுத்துகிறது என்பதைக் காண்கிறோம். மேலும், இதுபோன்ற துன்பத்தை அனுபவிக்கும் மக்களுக்கு நம்பிக்கை மற்றும் ஆறுதலின் தூதர்களாக நாம் மாறும்படி, தேவன் படிப்படியாகத் துன்பத்தின் அளவுகோலை உயர்த்துகிறார் என்பதையும் காண்கிறோம் (2 கொரி. 1:3-4).

பின்னர் பவுலும், பர்னபாவும் தெர்பைக்குச் சென்று இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியைப் பிரசங்கித்தனர். இங்கே அவர்கள் தேவனுடைய கிருபையின் கரத்தைக் கண்டார்கள். அதனால் பலர் அவர்களால் இரட்சிப்பிற்குள் வழிநடத்தப்பட்டனர் (அப். 14:20-21). அவர்களின் விரக்தி, மிகுந்த மகிழ்ச்சியாக மாறியது. எனினும், இந்த நிவாரணம் மற்றும் மீட்பின் காலத்தில், தான் இல்லாத போது விசுவாசிகளைக் கவனித்துக்கொள்ள உள்ளூர் தலைவர்களை நியமிப்பதில் தவறினால், திருச்சபைகளை ஸ்தாபிக்கும் தனது பணி முழுமையடையாது என்பதைப் பவுல் புரிந்துகொண்டார்.

எனவே, பவுலும் பர்னபாவும் தாங்கள் நாட்டிய ஒவ்வொரு திருச்சபையிலும் இரண்டு காரியங்களைச் செய்தனர். அங்கு அவர்கள் மேலும் துன்புறுத்தலை எதிர்கொள்ள வாய்ப்பிருந்தபோதும், பயமின்றி ஒவ்வொரு சபைக்கும் திரும்பிச் சென்றனர். முதலாவதாக, கிறிஸ்தவ வாழ்க்கை சோதனைகளாலும், உபத்திரவங்களாலும் நிறைந்திருக்கும் என்றும், இறுதிவரை விடாமுயற்சியுடன் இருந்து தேவனுடைய ராஜ்யத்திற்குள் நுழைய வேண்டும் என்றும் விசுவாசிகளுக்குக் கற்பித்தார்கள். பின்னர், விசுவாசிகளைக் கவனித்துக்கொள்ள மூப்பர்களை நியமித்தார்கள். ஜெபத்துடனும், உபவாசத்துடனும் அவர்கள் நம்பிய கர்த்தரிடம் மூப்பர்களை ஒப்புவித்தார்கள் (அப். 14:21-23). இந்த உள்ளூர் தலைமைத்துவத்தை நிறுவும் பணி, நாட்டப்பட்ட திருச்சபைகளின் நீண்டகால உயிர்வாழ்விற்குத் தேவையான முக்கியமான கட்டமைப்பை வழங்கியது.

2018ஆம் ஆண்டில், பிரைடென்பாக் மற்றும் சிம்மர்மேன் (Breytenbach and Zimmermann) லுக்கவோனியாவிலிருந்த "நூற்றுக்கணக்கான இறுதி ஊர்வல கல்வெட்டுகளை" பகுப்பாய்வுச் செய்தனர். இந்த கிறிஸ்தவ கல்லறைக்கற்கள், விசுவாசிகள் சமூகம் நகரங்களிலிருந்து கிராமப்புற பகுதிகளுக்கும் விரிவடைந்தது என்பதற்கான மதிப்புமிக்க ஆதாரத்தை வழங்கின. இந்த சமூகம் பராமரிப்பு மற்றும் பகிர்வு என்ற தனித்துவமான உள்ளூர் கலாச்சாரத்தையும் வளர்த்தது. 4ஆம் நூற்றாண்டில், புகழ்பெற்ற இறையியலாளர் பேசில் தி கிரேட்டின் (Basil the Great) நெருங்கிய நண்பரான ஆம்பிலோசியஸ் (Amphilochius) ஒரு குறிப்பிடத்தக்க பேராயராக இருந்தார். அவர் இக்கோனியாவைச் சேர்ந்தவர். அங்கு நாட்டப்பட்ட திருச்சபை ஒரு மிஷனெரிப் பணித்தளமாக இருந்ததிலிருந்து வளர்ந்து, நீடித்த பிராந்திய சமய ஒருங்கிணைப்பு மையமாக மாறியது என அவரது எழுத்துக்களிலிருந்துப் புரிந்துகொள்கிறோம்.

> **தேவபக்தியுள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் வாழ்க்கையில் வருகின்ற வலியும், துன்பமும் அவர்களை ஒருபோதும் நசுக்குவதில்லை; மாறாக தேவனின் மீதான அவர்களின் பற்றுதலை அதிகப்படுத்துகிறது என்பதைக் காண்கிறோம்.**

## நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?

அற்புதங்கள் நற்செய்திப் பணியின் இறுதி தந்திரம் அல்ல. அவை மக்கள் இயேசுவின் மீது விசுவாசம் வைக்கவும் உதவலாம் அல்லது அவரை விட்டு அவர்களைத் திருப்பவும் செய்யலாம். எனவே, நாம் அடையாளங்கள் மற்றும் அதிசயங்களை விரும்புபவர்களாக இருக்கக்கூடாது. மக்களை இரட்சிக்கும் கிருபையைத் தருகின்ற இயேசுவின் மீதே நம் கண்களைப் பதித்தவர்களாய் இருக்க வேண்டும். இரண்டாவதாக, நாம் எப்போதும் பல தலைவர்களை உருவாக்கி, திருச்சபை மற்றும் நற்செய்திப்பணியைக் கவனித்துக்கொள்ள அவர்களை நியமிக்க வேண்டும். நாம் தொடங்கிய காரியங்களை வேறொருவர் வழிநடத்துவதைப் பார்ப்பதிலுள்ள மகிழ்ச்சியை நாடுபவர்களாய் இருக்க வேண்டும்.

MR. ISRAEL NATHANIEL EDWARD

-4ஆம் பக்கத் தொடர்ச்சி

*முடிவு:*

செபிலோனின் வாழ்வு உறுதியான நங்கூரமிட்ட வாழ்வை விவரிக்கிறது. நோக்கத்தில் உண்மைதன்மையுடன் (Loyal in purpose) செயல்பட்டார்கள். கடற்பயணம் மேற்கொண்டு பொருளாதாரம் மட்டுமல்ல; ஆன்மீக நிதி ஆதாரத்தையும் ஈட்டினார்கள். ஆம், செபுலோனின் பட்டணங்களில் ஒன்றான பெத்லகேமில் பிறந்த இயேசு, கலிலேயக் கடற்பகுதியில் நிறைவான ஊழியத்தை நிறைவேற்றினார். கானானியப் பகுதியிலிருந்த பயணப்பாதையான கப்பர்நகூம் இயேசுவின் மிகப்பெரிய ஊழிய ஸ்தாபனமாக விளங்கியது. ஆன்மீகச் செல்வமான சுவிசேஷத்தைப் பகிர்ந்துக் கொண்டதினால், திரளான ஜனங்கள் எருசலேமிற்கு வந்து நீதியின் பலிகளைச் செலுத்தினார்கள். இந்த உன்னத நோக்கத்தைப் புரிந்துக்கொண்ட செபுலோன் கோத்திரத்தார் ஒரு படகு போல செயல்பட்டு, கடல்களின் செழிப்பைப் பகிர்ந்துக்கொடுத்து, மற்றவர்களைத் தேவனிடம் கூட்டிச் சேர்ப்பதற்கு வஞ்சனையில்லாத மனதுடன் செயல்பட்டார்கள். இருளில் இருக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள் (ஏசாயா 9:1, 2). இவர்கள் ஆன்மீகப் போரில் வல்லவர்கள். தங்கள் வரிசையைக் காக்கிறவர்கள். நிலையான மனதுடன் செயல்பட்டு, வெற்றிகரமாய் வாழ்கிறவர்கள். இதுவே லேயாள் கூறிய "தேவன் கொடுத்த நல்ல ஈவு (ஆதி. 30:20).

பிரியமானவர்களே! செபுலோனின் வாழ்வின் நோக்கத்தில் உண்மைத்தன்மை காணப்பட்டது. இது பிறரிடமிருந்து நன்மை, ஒத்தாசை, லாபம், எதிர்பார்ப்பு ஆகியவற்றை முக்கியப்படுத்தாமல், தேவனின் திட்டத்தை நிறைவேற்ற பிரிவினைவாத எண்ணங்கள் இல்லாமல் செயல்பட நமக்கு அழைப்பு கொடுக்கிறது. எனவே, நாம் "*பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருவோம்*" (பிலி. 3:13, 14). தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

**பிறரிடமிருந்து நன்மை, ஒத்தாசை, லாபம், எதிர்பார்ப்பு ஆகியவற்றை முக்கியப்படுத்தாமல், தேவனின் திட்டத்தை நிறைவேற்ற பிரிவினைவாத எண்ணங்கள் இல்லாமல் செயல்பட நமக்கு அழைப்பு கொடுக்கிறது.**

# பம்மல் வாலிபர் ஜெபக்குழுவின் ஆரம்பம்...

பம்மல் முன்னேற்றப்பகுதியில் புதிதாக FMPBஇன் மாதாந்திர வாலிபர் ஐக்கிய கூடுகையை ஆரம்பிக்க தேவன் கிருபை கொடுத்தார். இங்கு நடந்த முதல் வாலிபர் ஐக்கிய கூடுகையான LoggedINஇல் அருகிலிருக்கும் திருச்சபைகளிலிருந்து 35 வாலிபர்கள்கலந்துகொண்டனர்.இக்கூடுகையானது கலந்துகொண்ட அனைத்து வாலிபர்களுக்கும் மிகுந்த உற்சாகத்தையும், ஆசீர்வாதத்தையும் அளித்தது.

இதில் திரு. வாலெண்டைன் டேவிடார் அவர்கள் தேவனுடைய அன்பைப் பற்றியதான அர்த்தமுள்ள செய்தியைப் பகிர்ந்துக்கொண்டார்கள். மேலும், சகோதரர் ஜோஷுவா மேடி அவர்கள் தேவனுடைய நம்பிக்கைக்குரிய தன்மையை வெளிப்படுத்தும் வல்லமையான சாட்சியை வழங்கி வாலிபர்களை உற்சாகப்படுத்தினார்கள்.

இது கலந்துக்கொண்ட அனைத்து வாலிபர்களுக்கும் அவர்களின் விசுவாசத்தை வலுப்படுத்தும் வகையில் ஒரு புத்துணர்ச்சியூட்டும் அனுபவமாக இருந்தது.

இந்த வாலிபர் ஐக்கியக் கூடுகை ஒவ்வொரு மாதமும் 4வது வாரம் நடத்த வேண்டும் என்று தீர்மானித்துள்ளனர். இக்கூடுகை எவ்வித தடையுமின்றி தொடர்ந்து நடைபெறவும், அநேக வாலிபர்கள் ஒவ்வொரு மாதமும் நடைபெறவுள்ள இக்கூடுகையில் கலந்துக்கொள்ளவும், தொடர்ந்து ஜெபித்து ஆத்துமபாரத்தைப் பெற்றுக்கொண்டு மிஷனெரி பணியில் ஈடுபடவும் ஜெபிப்போம்.

தேவனுக்கே மகிமை உண்டாவதாக!



# VISION 2030

- நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, பரிசுத்த ஆவியானவர் உருவாக்கிய ஒரு ஜெபிக்கும் மக்கள் இயக்கம். தேவன் அருளிய தரிசனத்திற்குக் கீழ்ப்படிந்தவர்களால் இந்த இயக்கம் உருவானது.
- 1967ஆம் ஆண்டு ஜுன் 9ஆம் நாள் முதல் மிஷனெரி அனுப்பப்பட்டு, முதல் பணித்தளம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1972 - 1981 வரை 11 மாநிலங்கள், 220 மாவட்டங்கள், 440 ஊழியர்களை 10 ஆண்டுக்குள் அனுப்பும் புதிய தரிசனம் உருவானது. **“ஊருக்கு ஒரு மிஷனெரி பாருக்குள் அனுப்பிட ஆளுக்கொரு கை ஆண்டவருக்காக வை”** என்னும் விசுவாச மந்திரம் பிறந்தது.
- 440 ஊழியர்களை அனுப்பும் தரிசனத்தின் விளைவாக 1982இல் 250 பேரை அனுப்ப தேவன் உதவி செய்தார். ஊழியரைத் தாங்கும் 180 ஜெபக்குழுக்களையும், 600க்கும் அதிகமான வளரும் ஜெபக்குழுக்களையும் தந்தார்.
- 1991ஆம் ஆண்டு நடைபெற்ற திட்டக்கூடுகையில் ‘‘பெருகுவோம் ‘95’’, ‘‘மிஷன் ‘95’’ ஆகிய இரு புதிய செயல் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- ‘‘மிஷன் ‘95’’ கூடுகையில் 980 பேர் கலந்துகொண்டனர். 313 பேர் முழு நேரப்பணிக்கென தங்களை அர்ப்பணித்தனர். இவர்களில் சுமார் 100 பேர் உடனே ஊழியத்தில் இணைய ஆர்வமுள்ளவர்களாக இருந்தனர்.
- இன்று 24 மாநிலங்களில் 263 இனமக்கள் மத்தியில் செய்து வரும் ஊழியத்தின் பலனாக 8 இலட்சத்துக்கும் அதிகமான ஆத்துமாக்களை தேவன் நமக்குத் தந்துள்ளார்.
- இந்தியரை இயேசுவுக்கு சொந்தமாக்கும் இப்பணியைச் செய்ய வாலிபர்களும், இளம் தம்பதியர்களும் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியிலிருந்து 1000 பேர் கலாச்சாரம் கடந்து மிஷனெரிகளாக செல்வதற்கு கர்த்தர் கொடுத்த தரிசனமே ‘‘**VISION 2030**’’. இத்தரிசனம் நிறைவேற ஜெபிக்கும் ஜெப வீரர்கள் தேவை! ஜெபிக்கும் ஜெபக்குழுக்கள் தேவை! மிஷனெரிகளாக புறப்பட்டு செல்வோர் தேவை!
- இந்த தரிசனம் நிறைவேற ஜெபிப்பது நமது அனைவருக்குமுள்ள பொறுப்பு. இப்பொறுப்பினை உணர்ந்து இதற்காக கரிசனையோடும், பாரத்தோடும் ஜெபிப்போம்.

### ஜெபக்குறிப்புகள்:

- கிறிஸ்துவை தங்கள் வாழ்வில் இரட்சகராய் ஏற்றுக்கொண்ட வாலிபர்கள் மற்றும் இளம் தம்பதியர்கள் மிஷனெரி தரிசனம் பெற்றுக்கொண்டு தேவையுள்ள நமது தேசத்தில் மிஷனரிகளாய் புறப்பட்டு செல்ல
- மிஷனெரி ஊழியத்திற்கு அர்ப்பணித்து மிஷனெரிகளாய் செல்வதற்கு தரிசனம் மற்றும் வாஞ்சையுள்ள தங்களுடைய பிள்ளைகளை பெற்றோர்கள் மிஷனெரி ஊழியத்திற்கு அனுப்பி வைக்க
- நமது திருச்சபைகள், போதகர்கள் தங்கள் சபைகளில் மிஷனெரி தரிசனத்தைப் பகிர்ந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் தங்கள் சபை வாலிபர்களை மிஷனெரிகளாக அனுப்பித் தர
- நமது முன்னேற்றப்பணி மாவட்டங்களில் வாலிபர் கூடுகைகள், மாதாந்திர ஐக்கிய கூடுகைகள் நடைபெற மற்றும் முறையான பின் தொடர் பணிகள் செய்யப்பட
- 2030க்குள் 1000 மிஷனெரிகள் அனுப்ப வேண்டும் என்ற தரிசனமும், பாரமும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் அனைத்து முன்னேற்ற மாவட்டங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்த ஜெபிப்போம்.

**ஊருக்கு ஒரு ஜெபக்குழு,**
**ஒரு ஜெபக்குழுவுக்கு ஒரு மிஷனெரி**

# தேவ ஞானத்தில் நடந்திடுங்கள்!

HANDLE WITH CARE

## BUILD ON THE RIGHT FOUNDATION

பரபரப்பான சாலையில் நம் தொடர்பயணத்திற்கும், நிற்பதற்கும், வலது இடது பக்கங்களில் திரும்புவதற்கும் உதவுகின்ற நிறுத்த விளக்குகளில் ஒளிரும் **நில், கவனி, செல்** என்ற அறிவிப்புகள் விபத்தைத் தடுப்பதுடன், பாதுகாப்பான பயணத்திற்கும் உதவுகின்றன. இதேபோல மணவாழ்வுக்குள் நுழையும் ஒவ்வொருவரும் **"கவனி", "யோசி", "முடிவெடு"**, என்ற அறிவிப்புப் பலகையின் முன்பு நிற்கின்றனர். அவசரகதியிலோ அல்லது அலட்சியத்துடனோ இத்திருமண வாழ்விற்குள் நுழையாதீர்கள்.

**கவனி:**

- திருமணம் என்பது ஒருநாள் விளையாட்டல்ல. அது ஆயிரம் காலத்துப் பயிர்.
- திருமணம் யாவருக்குள்ளும் கனமுள்ளது என்றார் நம் தேவன் (எபி. 13:4).
- திருமணம் என்பது ஒப்பந்தம் (CONTRACT) அல்ல. அது ஒரு உடன்படிக்கை (COVENENT). ஒப்பந்தம் குறுகிய காலத்திற்குரியது. உடன்படிக்கை இரண்டு நபருக்கிடையே ஏற்படுவது.
- திருமணம் என்பது வாழ்நாள் முழுவதற்குமான உடன்படிக்கை. மரணம் மட்டுமே இந்த உடன்படிக்கையைப் பிரிக்க முடியும்.
- எனவே தோற்றங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து தோற்றுவிடக்கூடாது.

VALUES மிக முக்கியம். வேலை, வாழ்க்கை முறை (எங்கு வாழப் போகிறோம்?) வருமானம், கடன், சேமிப்பு, செலவு செய்யும் முறைகள் என எல்லாவற்றிலும் ஒரு தெளிவு வேண்டும். திருமணத்திற்கு என நியமிக்கப்பட்ட உங்கள் துணையிடம் திறந்த மனதுடன் பகிர்ந்துக் கொள்ளுங்கள். இதில் திறந்த மனதுடன் இருப்பவர்கள் ஜெயிக்கின்றார்கள். திருமணத்திற்குப் பின்பு திடீரென்று எதிலும் மாயாஜால மாற்றம் வரப்போவதில்லை. எனவே துணையைத் தேர்ந்தெடுப்பதில் கவனமாயிருங்கள். தேவ ஞானத்தை நாடிடுங்கள்.

**யோசி:**

கர்த்தராகிய தேவன் "மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்" (ஆதி.2:18). மனைவி என்பவள் ஒரு வேலையாளோ அல்லது அடிமையோ அல்ல. அவள் தன் துணையாளருடன் சேர்ந்து குடும்பத்தைக் கட்டியெழுப்புகிறவள். எனவே தம்பதியரான பின் நாம் ஆவிக்குரிய வாழ்விலும், சமுதாய வாழ்விலும், குடும்ப வாழ்விலும் துணையாளர்களாக இருக்க வேண்டும்.

**திருமணம் உடல் சுகத்திற்கானதல்ல; அது திருமணத்தின் ஒரு அம்சம்தான்.**

செல்வத்தையும், சந்தோஷத்தையும் பகிர்ந்துகொள்ள அநேகர் வருவர். ஆனால் நெருக்கங்கள், கஷ்டங்கள், தோல்விகள் இவற்றை பகிர்ந்துக் கொள்ள தேவன் ஏற்படுத்தியது தான் ஏற்றத்துணை என்ற திருமண பந்தம். எனவே நன்கு யோசித்து, தேவ சித்தம் அறிந்து துணையைத் தேர்ந்தெடுங்கள்.

**முடிவெடு:**

திருமண வாழ்வில் மிகவும் முக்கியமானது சரியான முடிவெடுத்தல். கண்களின் இச்சைகளுக்கு மனதைப் பறிகொடுத்து, சிறிதும் யோசிக்காமல் மாம்ச உணர்ச்சிகளை மையமாக்கிய திருமணங்கள் அஜாக்கிரதையாய் சாலையைக் கடக்கும் வாகன ஓட்டி (DRIVER) போன்று விபத்துக்குள்ளாகி வேதனைப்பட வேண்டியதாயிருக்கும்.

வாழ்க்கை என்பது ரோஜாப் பூக்கள் நிறைந்த படுக்கையல்ல. குடும்பத்திற்குள்ளே இருந்தும், வெளியே இருந்தும் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். கிறிஸ்தவர்களுக்கு பிசாசிடமிருந்தும் தாக்குதல் உண்டாகும். அழுத்தம், தோல்வி, விமர்சனம் போன்றவைகளை நம் வாழ்வில் எதிர்கொள்ளும் பொழுது எப்படி சமாளிக்கிறோம் என்பதுதான் முக்கியம். நாம் EMOTIONAL MATURITYக்கு (உணர்ச்சிகளில் முதிர்ச்சி) பொறுப்பேற்கின்றோமா? அல்லது பிறரை குறை சொல்லுகிறோமா? சண்டையில்லாத வாழ்க்கை என்பது சாத்தியமில்லாமலிருக்கலாம். ஆனால் நம் வார்த்தைப் பரிமாற்றங்களில் அதை எப்படி கையாளுகிறோம் என்பதுதான் மிக முக்கியம். இந்த நவீன உலகத்தில் குடும்ப வாழ்வு பல அழுத்தங்கள், குழப்பம், கடவுள் மேலுள்ள பற்று, நவீனம் (TREND), மீடியாக்களின் போலித்தன போதனை, புது கலாச்சார மோகம் இவைகளால் தாக்கப்படுகிறது. சமாதானமற்ற இவ்வுலகில் ஒரே வழி சமாதான காரணரை நம் குடும்பங்களுக்குள் அனுமதித்தல் தான். அவர் சித்தம் உங்கள் வாழ்வில் நிறைவேறும்போது சண்டைகள், நீயா நானா என்ற மோதல்கள், வன்முறைகள், காயங்கள், பிரிவினைகள், விவாகரத்து போன்றவை மறைந்து சமாதானம் பெருகும்.

**முடிவு உங்கள் கையில்...**

இன்றே இதனை கவனித்து, யோசித்து, உங்கள் எதிர்கால வாழ்வை முடிவெடுக்க தேவனுக்கு இடங்கொடுங்கள். தேவனுடைய வார்த்தையில், ஐக்கியத்தில் வளருங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**"உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்;
உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக." (சங்கீதம் 143:10)**


MRS. VASANTHI EMMANUEL

# மன்னிக்காத ஊழியக்காரன்

## (மத்தேயு 18:23-35)

REV. K. KINGSLEY JOHN



மனித வாழ்க்கையில் மன்னிப்பு என்பது மிகவும் முக்கியமான ஒரு ஆவிக்குரிய பண்பாகும். அதைப்பற்றி இயேசுகிறிஸ்து மிகவும் தெளிவாகவும், விளக்கமாகவும் எடுத்துரைக்கும் உவமை தான் "மன்னிக்காத ஊழியக்காரன்".

### தேவ ராஜ்யத்தின் ஒப்புமை:

இந்த உவமையில், ஒரு ராஜா தன் ஊழியக்காரர்களிடம் கணக்குப் பார்க்க ஆரம்பிக்கிறார். ஒருவன் ராஜாவுக்கு பதினாயிரம் தாலந்து கடன்பட்டிருந்தான். அவன் அதை திருப்பிச் செலுத்த முடியாத நிலைமையில் இருந்தான். அதனால் ராஜா, அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, கடனைத் தீர்க்கும்படிக் கட்டளையிட்டான். ஆனால் அந்த ஊழியக்காரன் தாழவிழுந்து வணங்கி ராஜாவிடம் விண்ணப்பித்து என்னைப் பொறுத்தருளும், நான் எல்லாவற்றையும் செலுத்துவேன் என்று கூறுகிறான். எனவே ராஜா மனதிரங்கி அவனை விடுதலைபண்ணி, அவனுடைய முழு கடனையும் மன்னித்து விடுகிறார் என்பதை நாம் இதில் காண்கிறோம். இதைப்போலவே தேவன் நமக்கு அளிக்கும் கிருபையும் அளவிட முடியாதது. நாம் செய்த பாவங்களின் கடனை நாம் செலுத்த முடியாது. ஆனாலும் அவை எல்லாவற்றையும் தேவன் மன்னிக்கிறவராயிருக்கிறார்.

### மன்னிப்புப் பெற்றவன் மன்னிக்காத நிலை:

மன்னிப்புப் பெற்றவன் வெளியே போய் தன்னிடம் சிறிய தொகை கடன்பட்டிருந்த உடன்வேலைக்காரனைப் பிடித்து என் கடனைச் செலுத்து என்று கூறுகிறான். அந்த மனிதன் அவன் காலில் விழுந்து என்னிடத்தில் பொறுமையாயிரும், நான் எல்லாவற்றையும் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று வேண்டிக்கொண்டபோது, அவனுக்கு மன்னிக்காமல் அவனைச் சிறையில் போடுகிறான்.

இதில் ஒரு பெரிய முரண்பாடு என்னவென்றால், தான் மன்னிப்பைப் பெற்றிருந்தும், அடுத்தவனின் சிறிய தவறை மன்னிக்க அவனுக்கு மனதில்லை.

### நீதியும், தீர்ப்பும்:

இந்த விஷயம் ராஜாவுக்கு தெரியவரும்போது அவர் மிகவும் கோபமடைந்து, அந்த மன்னிக்காத ஊழியக்காரனைத் தண்டிக்கிறார். நான் உன்னை மன்னித்ததுபோல, நீயும் உன் உடன்வேலையாளை மன்னிக்க வேண்டாமோ? என்று கேட்கிறார்.

இது நமக்கு மன்னிப்பைப் பெற்றவர்கள், பிறரை மன்னிக்காதவர்களாக இருக்கக்கூடாது என்பதைக் காட்டுகிறது

### ஆவிக்குரிய பாடங்கள்:

இந்த உவமையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கியமான பாடங்கள்:

- மன்னிப்பு தேவனுடைய இயல்பு – நாம் பெற்ற மன்னிப்பு அளவில்லாதது.
- மன்னிக்காத மனம் ஆபத்தானது – அது நம்மை நியாயத்தீர்ப்புக்குக் கொண்டு செல்லும்.
- மற்றவர்களை மன்னிக்க வேண்டும் – நாம் பெற்ற கிருபையை மற்றவர்களுக்கும் கொடுக்க வேண்டும்.
- நம் உள்ளத்திலிருந்து மன்னிக்க வேண்டும் – வெளிப்படையாக அல்ல, உண்மையாக மன்னிக்க வேண்டும்.

### நமது வாழ்க்கையில் பயன்பாடு:

இன்றைய உலகில், சின்ன சின்ன விஷயங்களுக்காக நாம் ஒருவரையொருவர் மன்னிக்காமல் இருக்கிறோம். குடும்பத்தில், சபையில், நண்பர்களிடையே என பல பிரிவினைகள் இதனால் வருகிறது. இதைக்குறித்து இயேசு சொல்லும் செய்தி தெளிவானது: "நீங்கள் மனதார மற்றவர்களை மன்னிக்கவில்லை என்றால், தேவனும் உங்களை மன்னிக்கமாட்டார்."

### முடிவு:

"மன்னிக்காத ஊழியக்காரன்" உவமை நமக்கொரு கண்ணாடி போல உள்ளது. நாம் தேவனிடத்தில் பெற்ற கிருபையை நினைத்தால், மற்றவர்களை மன்னிக்காமல் இருப்பது நியாயமல்ல. ஆகையால், நாம் எல்லோரும் மன்னிப்புப் பெறுகிறவர்களாக மட்டுமல்ல, பிறரை மன்னிக்கும் மனிதர்களாகவும் வாழ வேண்டும். இப்படிப்பட்ட உன்னதமான வாழ்வை வாழ ஆண்டவருக்கு நம்மை அர்ப்பணிப்போம்! அவ்விதமாய்க் கர்த்தர் நம்மை வழி நடத்துவாராக! ஆமென்.



# கனம் பெற்ற கமாலியேல்

REV. ALBERT PRABHAKARAN


மனிதரால் பெருமதிப்புப் பெற்ற பரிசுத்த பரிசேயன்,
மாதேவனின் சட்டம் போதிக்கும் மறைநூல் ஆசான்,
சமநிலை மாறா சனெகெரிம் மன்றத்தின் உறுப்பினன்,
அன்பும் கருணையும் அகத்தே கொண்ட உயர்நிலை குணத்தவன்,
அநீதியின் களைப்பிடுங்க உலகம் தோன்றிய சத்தியவான்,
அப்போஸ்தலன் பவுலின் ஞானத் தகப்பன்.

மலிவான ஆதாயம் தேடாத மரியாதைக்குரியவன்,
மாறிடும் வார்த்தைக்கு எதிரானவன்,
மாறாத தேவ சட்டத்திற்கு அழகானவன்,
மாட்சிமை மிக்க ரபியாய் உயர்வு பெற்றவன்,
மன்றத்தோர் யாவருக்கும் மகுடமானவன்.

ததும்பாத உறுதி நிலை கொண்ட சரித்திரப் புருஷன்,
தெய்வ பயம் நிறைந்த எளிமையின் சொரூபன்,
பொறுமையின் வடிவத்திற்குப் புதிய வடிவானவன்,
போதனைக்கும் யோசனைக்கும் உயர் பொக்கிஷதாரி,
சபையின் சமாதானத்திற்கு சிந்தனை விதைத்த ஞானவாதி.

மனிதச்செயல் என்றும் மண்ணோடு கலந்திடும்,
தேவச்செயலோ உயிரோட்டமாய் யுகங்கள் பேசிடும்,
கொந்தளிக்கும் கோபங்கள் பிரிவினை கொணர்ந்திடும்,
அமைதியின் கோபுரம் உயர் நிலை கொண்டிடும்,
அவசரத் தீர்ப்புகள் என்றும் ஆசீர்வாதம் கொணராது,
ஆத்திரக் குணங்கள் என்றும் புதுச் சரித்திரம் படைக்காது.

அமைதியின் ஆடையை அணிந்திடுவோம்,
அநீதியின் வேரை அகற்றிடுவோம்,
உண்மையின் முகமாய் வாழ்ந்திடுவோம்,
உயர்வான சொற்களைத் தந்திடுவோம்,
தரமில்லா வாழ்வைத் தகர்த்திடுவோம்,
தரணியின் அன்பை விலக்கிடுவோம்,
நீதியின் நுணுக்கம் கற்றிடுவோம்,
நித்தியரை நிஜமாய்ப் போற்றிடுவோம்..!



# இயேசு கிறிஸ்துவின் சீஷன் பிலிப்பு



**முன்னுரை:**

இயேசுவின் சீடர்களில் ஒருவரான பிலிப்பு, பெத்சாயிதா கிராமத்தைச் சேர்ந்தவர். இதே கிராமத்தைச் சேர்ந்தவர்களான பேதுரு மற்றும் அந்திரேயாவும் இயேசுவின் சீடர்களாக மாறினர். பிலிப்பு, நாத்தான்வேலை இயேசுவிடம் அறிமுகப்படுத்தினார். பிலிப்பு மிகவும் சுறுசுறுப்பானவர் என்பதையும், இயேசுவே "வரவிருக்கும் மேசியா" என்று உடனடியாக அடையாளம் காணும் திறன் பெற்றவர் என்பதையும் இந்தச் செயல் காட்டுகிறது. இவர் பிலிப்பு கிரேக்கம் மற்றும் ஆசியா மைனர் பகுதிகளுக்குச் சென்று இயேசுவின் நற்செய்தியைப் பிரசங்கித்த ஒரு நற்செய்தியாளர் என்று வரலாற்றுப் பதிவுகள் குறிப்பிடுகின்றன.

**இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியாளர் பிலிப்பு:**

பிலிப்பு முதலில் யோவான் ஸ்நானகனின் சீடர்களில் ஒருவராக இருந்திருக்கலாம் என்று சில அறிஞர்கள் நம்புகிறார்கள். மேசியாவின் வருகை மிக அருகிலுள்ளது என்று இயேசுவின் முன்னோடியான யோவான்ஸ்நானன் கற்பித்து வந்தார். பிலிப்பு இயேசுவைக் கண்டபோது, "இவரே வரவிருக்கும் மேசியா" என்று உறுதியாக நம்பி, நாத்தான்வேலிடம் ஓடிச் சென்று, தான் மேசியாவைக் கண்டுவிட்டதாகக் கூறினார். மேலும், இயேசுவைக் காண தன்னுடன் வருமாறு நாத்தான்வேலை வற்புறுத்தினார்.

**சீடராக பிலிப்பு அழைப்பு பெறுதல்:**

இயேசு பிலிப்புவை நேரடியாகத் தன் பின்னே வருமாறு அழைத்ததாக யோவான் நற்செய்தி பதிவு செய்கிறது. பிலிப்பு கிரேக்கப் பெயரைக் கொண்டிருந்ததால், அவரால் கிரேக்க மொழியில் பேச முடிந்தது. இதன் காரணமாகவே, எருசலேமுக்கு வந்த கிரேக்க யாத்ரீகர்கள் இயேசுவைச் சந்திக்க பிலிப்பை அணுகியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. பிலிப்பு ஒரு குழுவாக இணைந்து பணியாற்றுவதில் சிறந்தவர். அந்திரேயாவுடன் சேர்ந்து, கிரேக்க சமூகத்தைச் சேர்ந்த தேடுதலிலுள்ள மக்களை இயேசுவிடம் அழைத்துச் சென்றார்.

**பிலிப்புவின் ஊழியப் பதிவுகள்:**

பிலிப்பு தனிப்பட்ட உரையாடல்களில் சிறந்தவராக இருந்தார். அவர் நாத்தான்வேலை இயேசுவிடம் கொண்டு வந்தார். மேசியாவைத் தேடிக்கொண்டிருந்த கிரேக்கக் குழுவினரை வழிநடத்தினார். அவர் இயேசுவுக்கு நெருக்கமானவராகவும், ஊழியத்தின் தேவைகளைத் தெரிவிப்பதில் சிறந்தவராகவும் இருந்தார். இயேசுவின் பிரசங்கத்தைக் கேட்க வந்த 5000 மக்களுக்கு உணவுத் தேவை என்பதை அவரே முன்னெடுத்துக் கூறினார். கடைசி இராப்போஜனத்தின் போது, பிதாவைத் தங்களுக்குக் காண்பிக்குமாறு இயேசுவிடம் விளக்கம் கேட்டார். இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, பிலிப்பு ஒரு நற்செய்தியாளராக சமாரியா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஊழியம் செய்ததாக பாரம்பரியப் பதிவுகள் கூறுகின்றன.

**மிஷனெரி வாழ்க்கைக்கு ஒரு முன்மாதிரியாக பிலிப்பு:**

பிலிப்பு ஆண்டவரிடமும், அவருடைய சபையிடமும் நெருக்கமான அடித்தளத்தைக் கொண்டிருந்தார். அவர் சமாரியாவில் யூதரல்லாத மக்களிடையே நற்செய்தியைப் பிரசங்கித்தார். சீமோன் என்ற பெயருடைய ஒரு பிரபலமான மந்திரவாதிக்கு அவர் ஞானஸ்நானம் கொடுத்தார் [அப். 8:13]. பிலிப்பு எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்தார். பேதுருவும், யோவானும் அவரைச் சந்திக்க வந்தபோது, அவர் அவர்களுடன் இணைந்து பணியாற்றினார். அந்த மந்திரவாதி விசுவாசத்தில் உறுதியாக இல்லாதபோது, பேதுரு அவரை ஐக்கியத்திலிருந்து நீக்கினார். பிலிப்பு ஒரு குழுப் பணியாளராகப் பேதுருவின் தலைமைத்துவத்தையும், முடிவையும் ஏற்றுக்கொண்டார். சமாரியாவில் புதிதாக மனந்திரும்பியவர்கள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெறுவதற்காகப் பேதுருவும், யோவானும் ஜெபிப்பதற்கு பிலிப்பு அனுமதித்தார் [அப். 8:15]. இந்த அதிகாரப்பூர்வமான செயல்களை அவர் ஒரு சவாலாகப் பார்க்காமல், புதிய சபை வளர உதவும் நன்மையாகவே கருதினார்.

பிலிப்பு தனது அப்போஸ்தல அதிகாரங்களில் பிடிவாதமாக இருக்கவில்லை. சமாரியாவில் புதிதாக நிறுவப்பட்ட சபையில் மூத்த போதகராக இருக்கும் பதவியை, ஊழியத்தின் நலனுக்காக அவர் விட்டுக்கொடுத்தார். வனாந்தரத்தில் எத்தியோப்பிய மந்திரியைச் சந்தித்த பிறகு, கர்த்தர் அவரைச் சமாரியாவிலிருந்து வெகுதூரம் அழைத்துச் சென்றார். பிலிப்பு ஒரு கலாச்சாரங்களைக் கடந்த மிஷனெரியாகவும், நற்செய்தி தொடர்பாளராகவும் இருந்தார். எத்தியோப்பியரின் மனமாற்றம், நற்செய்தி ஒரு புதிய, யூதரல்லாத மக்களைச் சென்றடைவதைக் குறிக்கிறது. பிலிப்பு தனது வெற்றியைக் கண்டு ஒரே இடத்தில் தங்கிவிடவில்லை. அவர் சமாரியாவுக்குச் சென்றார், ஒரு நபருக்காக வனாந்தரத்திற்குப் பயணம் செய்தார், பின்னர் பரிசுத்த ஆவியானவரால் செசரியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவர் மற்ற மிஷனெரிகளுக்கு விருந்தோம்பல் அளித்து உதவினார்.

**பிலிப்புவின் மரணம்:**

அப்போஸ்தலர் பிலிப்புவின் மரணம் பற்றி வேதாகமத்தில் பதிவுகள் இல்லை. இருப்பினும், கி.பி 80ஆம் ஆண்டில், பிரிகியாவில் (தற்போதைய துருக்கி) உள்ள ஹியராபோலிஸில் அவர் தியாகியாக மரித்தார் என்று பாரம்பரியப் பதிவுகள் கூறுகின்றன. பிலிப்பு தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டார் என்று பெரும்பாலான ஆரம்பகால சபைப் பாரம்பரியங்கள் கூறுகின்றன.

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் (FMPB) அழைப்பு:**

இந்த இயக்கம் பிலிப்புவைப் போன்ற நபர்களை (உங்களை) கலாச்சாரம் கடந்த மிஷனெரி ஊழியத்திற்கு எதிர்பார்க்கிறது. ஒரு நற்செய்தியாளராகவோ அல்லது சபை நிறுவுபவராகவோ எங்களுடன் இணையுங்கள். மிஷனெரி ஊழியத்தில் எங்களுடன் இணைந்து நாடு முழுவதும் பயணம் செய்யுங்கள், ஒரே இடத்தில் தங்கிவிடாதீர்கள். நற்செய்தி சென்றடையாத பல்வேறு இனமக்களுக்கு நற்செய்தியைக் கொண்டு செல்ல வேண்டும் என்ற FMPBஇன் தரிசனத்தை நிறைவேற்ற நீங்களும் எங்களுடன் இணைந்துக்கொள்ளுங்கள்.

# நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

நடத்தும்

# தமிழ் மாநில முகாம் 2026

கருப்பொருள்:

## பேர் சொல்லி அழைப்பு

ஏசாயா 43:1

**நாள்:** மே 21 முதல் 24 வரை

வியாழன் காலை 9:30 மணி முதல்
ஞாயிறு காலை 7:30 மணி வரை

**இடம்:** **பெத்தேல் வளாகம்,**
டேனிஷ்பேட்டை, சேலம்

### செய்தியாளர்கள்:

Dr. ராஜேஷ் டதி
Mr. G. ஜாண் சாமுவேல்
Rev. விஜய் பிரசன்னா ஐசக்
Mr. Y. நவநீதர்
Rev. J. ரூபன் சாமுவேல்
Rev. S. இம்மானுவேல் ரஞ்சித் சிங்
மற்றும் பணித்தள மிஷனெரிகள்

### சிறப்பு அம்சங்கள்:

பெரியவர்கள், இளம் தம்பதியினர், வாலிபர்கள், இளம் வாலிபர்கள், சிறுவர்களுக்கென தனித்தனி கூடுகைகள்.

### பதிவுக்கட்டணம்:

| பெரியவர்களுக்கு | சிறுவர்களுக்கு |
|---|---|
| ரூ.300/- | ரூ.200/- |

தரிசனமிகு பாடல்கள், அனலூட்டும் செய்திகள், ஊக்கமூட்டும் சந்தியா வேளைகள் மற்றும் பயனுள்ள பணித்தளப் பகிர்வுகள்.

ஆவிக்குரிய வாழ்வில் பெலப்படவும்,
மிஷனெரித் தரிசனத்தில் வளரவும்,
ஜெபக்குழுவாக, குடும்பமாக, சபையாக
**பங்குபெற அழைக்கிறோம்**

முகாம் முன்பதிவுக்கான QR குறியீடு

## முகாம் வளாகம் வந்தடைய...

- டேனிஷ்பேட்டை, பெத்தேல் வளாகம், சேலம் - பெங்களூர் நெடுஞ்சாலையிலுள்ள தீவட்டிப்பட்டியிலிருந்து 6 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது.
- சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து பொம்மிடி, லோக்கூர், இராமமூர்த்தி நகர் செல்லும் பேருந்துகள் மூலமாக பெத்தேல் மருத்துவமனை பஸ் நிறுத்தத்தில் இறங்கி வரலாம்.
- ஜோலார்பேட்டை- ஈரோடு, ஈரோடு - ஜோலார்பேட்டை மார்க்கமாக இரயிலில் வருபவர்கள் டேனிஷ்பேட்டை இரயில் நிலையத்தில் இறங்கவும்.
- உங்கள் வருகை குறித்த தகவலை பயண ஒழுங்கிற்கான பொறுப்பாளர்களிடம் தெரிவித்தால் உங்களைச் சந்தித்து அழைத்து வருவார்கள்.
- மே 21-ம் தேதி அதிகாலை முதல் சேலம் இரயில் நிலையம், சேலம் பேருந்து நிலையம், தீவட்டிப்பட்டி, டேனிஷ்பேட்டை சந்திப்புகளில் உங்களுக்கு உதவி செய்ய தன்னார்வ உதவியாளர்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளார்கள்.
- **பயண ஒழுங்கிற்குத் தொடர்பு கொள்ள:**
  **சகோ. A.ஞானதாஸ் - 90429 45090**
  **சகோ. P.ரத்னராஜ் - 94873 25000**

- முகாம் வளாகத்திற்குள் ஆண்கள் தனியாகவும் பெண்கள் தனியாகவும் தங்குமிடம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- வேதாகமம், நோட்டு, பேனா, தட்டு, டம்ளர், போர்வை மற்றும் டார்ச்லைட் கொண்டு வாருங்கள்.
- மே 22 (வெள்ளிக்கிழமை) உபவாச ஜெபம் முடிந்த பின் மாலை 5.00 மணிக்கு உணவு வழங்கப்படும்.

தமிழ்நாடு மாநில அளவிலான
இளம் வாலிபர் மற்றும் வாலிபர்களுக்கான
வேதாகமம் மற்றும் மிஷனெரிச் சரிதை தேர்வு

## BAMB
## BIBLE AND MISSIONARY BIOGRAPHY EXAM - 2026

வயது வரம்பு: **13-30** வயது வரை

- ஏசாயா 40ஆம் அதிகாரம் முதல் 66ஆம் அதிகாரம் வரை
- 2026 மார்ச், ஏப்ரல், மே மாத கேரீத் பத்திரிக்கையில் வெளியிடப்பட்டுள்ள மிஷனெரிகளின் வாழ்க்கை வரலாறு மற்றும் செய்திகள்
- மனப்பாட வேத பகுதி - ஏசாயா 53:1-12
- தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தேர்வு நடத்தப்படும். (NKJV & NIV ஆங்கில வேதாகமம் பின்பற்றப்படும்)
- இடம்: பெத்தேல் வளாகம், டேனிஷ்பேட்டை, சேலம்
- தேர்வு நாள்: மாநில முகாமின் 2ஆம் நாள் (22.05.2026)
- தேர்வு நேரம்: இரவு 8:30 மணி முதல் 10:30 மணி வரை
- பரிசு பெற குறைந்தது 50 மதிப்பெண் எடுக்க வேண்டும்
- தேர்வில் முதன்மை பெறும் முதல் மூன்று நபர்களுக்குச் சிறப்பு பரிசுகள் வழங்கப்படும். மற்றவர்களுக்குத் தகுதிச் சான்றிதழ் அளிக்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு:
**FMPB YOUTH WING 9445040148**

மே 24-ம் தேதி காலை திருவிருந்து ஆராதனையுடன் முகாம் நிறைவுபெறும்.

முகாம் முன்பதிவிற்கான மின்னஞ்சல் முகவரி:
**annualcampfmpb2026@gmail.com**

தொடர்புக்கு:
**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப்பள்ளிச் சாலை, அம்பத்தூர், சென்னை-600053
தொலைபேசி : 044-26570404, செல்: 9443039555,9488805454